# வேலைவாய்ப்புக்கு 20 கோடி ரூபா ஒதுக்கீடு!


Registered as a News Paper in Ceylon    விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 207
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 21 றஜபு 4 ஞாயிற்றுக்கிழமை (6-9-70)







## நவம்பரில் நியமனங்கள் ஆரம்பம்

கோட்டை,ஞாயிறு

**ஒருலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்துக்கு 20 கோடி ரூபாவை அரசாங்கம் நிதிஆண்டில் ஒதுக்கியுள்ளது, இத்தகவலை திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு ஏச். ஏ. டி. எவ். குணசேகரா நேற்றுத்தெரிவித்தார்.**

இத் திட்டம் நவம்பர் மாதத்திலிருந்து செயலாற்றப்படவிருக்கிறது. இதற்கான அங்கீகாரத்தைமந்திரி சபை ஏற்கனவே வழங்கி விட்டது.

20 கோடி ரூபாவும் வேலையில்லாத்திண்டாட்டத்தைப் போக்கும் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 5000 பட்டதாரிகளுக்கு முதலில் நியமனம் வழங்கப்படும் என்றும் ஜி. சி. ஈ. படித்தவர்களுக்கு கல்விஇலாகா நீர்ப்பாசன இலாகா போன்ற இலாகாக்களில் வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்றும் அவர் சொன்னார். கடந்த அரசாங்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும் நடவடிக்கைக்கு இவ்வளவு தொகையை ஒதுக்கவில்லை; முயற்சியும் எடுக்கவில்லை என்றும் அவர் கூறினர்.

# உருளைக்கிழங்கு இங்கிருந்து வெளிநாட்டுக்கும் செல்லும்!

## யாழ்ப்பாணத்தில் உதவி காணி அமைச்சர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

**இந்நாட்டில் உருளைக்கிழங்கு உற்பத்தியில் உள்ள கஷ்ட நஷ்டங்களை நன்கு ஆராய்ந்து அவற்றை நிவர்த்திசெய்து உருளைக்கிழங்கு உற்பத்தியை பெருக்கி, நாட்டின் சுயதேவையைப் பூர்த்திசெய்வதோடு உருளைக்கிழங்கை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வது தான் நமது குறிக்கோளாகும்**

யாழ்ப்பாணம் கச்சேரியில் நேற்றுக் காலை நடந்த உருளைக்கிழங்கு பற்றிய விசாரணைக் குழு தலைவரான உதவி காணி அமைச்சர் திரு. எச், எம். நவரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விசாரணை குழுவில் திரு. உதவி காணி மந்திரி எச். எம் நவரத்ன (தலைவர்) கம்பளை எம். பி. திரு. டி. எம். ஜெயரத்ன, பண்

விப்பதற்கு சமாஜம், விவசாயிகளுடன் ஒத்துழைத்து வந்துள்ளது. விவசாயிகளுக்கு உரம், கிருமிநாசினி வழங்கியதோடு, தோட்டத்தி[illegible] சென்று உடன்காசு கொ[illegible]த்து சமாசம் கொள்வனவுசெய்துவருகிறது. கடந்த 2 ஆண்டுகாலமாக உ[illegible] குறைகள் [illegible] உருளைக் கிழங்கு விநியோக [illegible]ப்பை சமாஜம் ஏற்

கடந்த வருடம் விதை உருளைக்கிழங்கு எல்லாம் வெளிச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டது. உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டது. சென்ற [illegible]டு சந்தை விலை உத்தரவாத விலையிலும் பார்க்க கூடுதலாக இருந்தது.

[illegible] விவசாய உற்பத்தியாளர் சங்க பிரதிநிதி திரு. கு. வி மகா[illegible]ம்

“சிறுபான்மையோரின்

## நியாயமான உரிமைகளை அரசு வழங்க வேண்டும்”

வெள்ளவத்தை, சனி

“நாளாந்தம் பத்திரிகைகளிலே வாசிக்கும், ஒத்துழைப்பு, ஒற்றுமை, சோஷலிசம் இவையெல்லாம் நாம் கேட்டுப் புளித்தவை. இவற்றைப் பற்றி இந்த நாட்டிலே பேசாத அரசியல் தலைவர்களும், தொழிற்சங்கப் பிரமுகர்களுமில்லை. இப்படியிருந்தும் எமது தொல்லைகள் தீர்ந்தனவா? உண்மையான சோஷலிசம் இந்நாட்டில் அரசோச்சுமானல் இங்கு பாகுபாடுகள் ஒரு சாராருக்கு மாத்திரம் இருக்க வேண்டியதில்லையே”

இவ்வாறு அஞ்சல் எழுதுவினைஞர்சங்கம் தனது 9வது ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளது. இவ்வறிக்கை மேலும் கூறுவதாவது:

“சிறுபான்மையினரின் உரிமைகளை, அவர்தம் நியாயமான வேண்டுகோளை வழங்கி இந்நாட்டிலே அவர்களையும் பாகுபாடற்ற விதத்தில் பெரும்பான்மையோருக்குரிய சகல சலுகைகளுக்கும் உரித்துடையோராக இருக்கக் கணித்துவந்தபல் நாம் அரசினரோடு தோளோடு தோள்நின்று நேசக்கரம் நீட்டுவோம் என்று உறுதியளிக்க ஆசைப் படுகிறோம்.”

# உறுப்பினர் இறந்தால் அவரது குடும்பத்துக்கு சம்பளம்

## தமிழ்நாடு சட்டசபை தீர்மானம்

சென்னை, செப். 5

தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர்கள் எவராவது அவர்களது பதவிக்காலத்தில் இறந்துவிட்டால், அவர்களின் சம்பளத்தை உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு மாதாமாதம் வழங்கப்படவேண்டுமென்ற தீர்மானம் இன்று சட்டசபையில் ஏகமனதாக நிறைவேறியது.

இறக்கும் உறுப்பினரின் பதவிக்காலம் முடியும்வரை அவர் பெற்றுவந்த முழுச் சம்பளத்தையும் அவரது குடும்பத்தினருக்கு வழங்கப்படும். குடும்பத்தினருக்கு எவ்வளவு தொகை வருமானம் வந்தாலும்கூட முழுச்சம்பளமும் வழங்கப்படவேண்டுமென்று அந்தத் தீர்மானம் கூறுகிறது.

ஈழநாடு விளையாட்டுவிழா

## மைதானம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஈழநாடு ஆதரவில்நடைபெறும் கரபந்தாட்டப் போட்டிகள்யாவும்நேற்று யாழ் மத்தியகல்லூரிவிளையாட்டுத் திடலிலேயே நடைபெற்றன. யாழ் பொலிஸ் நிலையத்திடலில் நடைபெறவிருந்த கரபந்தாட்டப் போட்டியும் காற்றுக் கடுமையாக வீசிய காரணத்தால் மத்திய கல்லூரித் திடலில் நடைபெற்றது. இனிமேல் நடைபெறும் போட்டிகளும் கல்லூரித் திடலிலேயே நடைபெறும் என்பதை விளையாட்டுக் கழகங்களுக்கு அறியத் தருகிறோம். நேற்றைய முடிவுகள் நாளை வெளிவரும்

(தே. நி.)

கூட்டுறவு சங்கங்களில்

# 600 பட்டதாரிகளுக்கு முகாமையாளர் பதவி

கோட்டை, சனி

உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சரால் அனுமதிக்கப்பட்ட நாடுபூராவும் புதிய திட்டத்தின்கீழ் அமைக்கப்படவிருக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கு முகாமையாளர்களாக 500ல் இருந்து 600 வரையுள்ள பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப் படவிருக்கிறார்கள்.

இந்தப் பட்டதாரிகளுக்கு பொல்கொல யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ளகூட்டுறவுப் பாடசாலைகளில் 5 மாதப் பயிற்சி அளிக்கப் படும் இப் பட்டதாரிகளில்

(4-ம் பக்கம் பார்க்க)

புதிய அரசியல் அமைப்பு

# அரசியல் தலைவர்களை ஒன்று சேர்க்கும் முயற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் அரசோச்சுமாளுல் இங்கு பாகுபாடுகள் ஒரு சாராருக்கு மாத்திரம் இருக்கவேண்டியதில்லையே''

இவ்வாறு அஞ்சல் எழுது நாம் அரசினரோடு தோளோடு தோள்நின்று நேசக்கரம் நீட்டுவோம் என்று உறுதியளிக்க ஆசைப் படுகிருேம்.''

# இன ஒற்றுமைக்கு இவர் கூறும் வழி

தாவடி, சனி

'இன்று ஆட்சியை நடாத்தும் தலைவர்கள் கதிர்காமத்து முருகப்பெருமானின் திருவருளைப் பெற்று ஆட்சி நடாத்துகிருர்கள். மேனியெங்கும் விபூதியணிந்து கையிலே வேலேந்தி, காவடியெடுத்து முருகபக்தராக மாறியுள்ள சிங்களத் தலைவர்களும் உளர். தமிழர்களின் கண்கண்ட தெய்வமாகக் கொண்டாடப் பெறும் முருகனின் திருவருளால் நாம் என்றும், இன்பமாய் வாழ தமிழ்த் தலைவர்களும் முருக பக்தராகமாறி அவனருளால் நினைத்தவற்றைப் பெறுதலே தலைசிறந்த வழியாகும்'.

என்றிவ்வாறு வித்துவான் சைவப்புலவர் திரு க. கணபதிப்பிள்ளை மாரீசன் கூடல் முருகமூர்த்தி கோவில் உற்சவத்தின் போது சொற்பொழிவாற்றுகையில் கூறினுர்.

'நாட்டின் தேசிய தெய்வமாக விளங்கும் முருகப்பெருமானைச் சிங்களத்தலைவர்கள் போற்றி வழிபாடு செய்வதைப் போலத் தமிழர்களும் வழிபடின் தேசிய ஒற்றுமை ஓங்கும். பரஸ்பரம் நல்லெண்ணம் விளங்கும். இரு சமூகமும் இன்பமாக வாழ நல்வழி பிறக்கும்.

கந்தபுராணத்தைச் சிறப்பாகப் போற்றியதே ஈழம் வாழ்ந்த தமிழ் மக்களின் கடந்தகால ஏற்றத்திற்கு அடிப்படையாகும். ஆகவே கந்தபுராணத்தைப் பாராயணம் செய்வதும் முக்கியமாகும்' என வித்துவான் கணபதிப்பிள்ளை கூறினுர்.

திரு. எச். எம். நவரத்தின மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்விசாரணை குழுவில் திரு. உதவி காணி மந்திரி எச். எம் நவரத்ன (தலைவர்) கம்பளை எம். பி. திரு. டி. எம். ஜெயரத்ன, பண்டாரவளை எம். பி. திரு. ஆர். எம். அப்புஹாமி, திரு எஸ். ஜெயவர்த்தன (செயலாளர்) அங்கம் வகித்தனர்.

தமிழில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் உடனுக்குடன் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டன.

வடபகுதி விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்க சமாஜ செயலாளர் திரு. ரி. கணேசன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

கடந்த 5 வருடமாக உருளைக் கிழங்கு வடபகுதியில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதனை ஊக்குவித்து சமாசம் கொள்வனவு செய்துவருகிறது. கடந்த 2 ஆண்டுகாலமாக உற்பத்தியில் [illegible] குறைகள் ஏற்பட்டது. விதை உருளைக் கிழங்கு விநியோக [illegible] சமாஜம் ஏற்[illegible] நியோகத்திற்கு தேவையான வாகனங்களில் அரசாங்க வீகிதத்தில் சங்கங்களுக்கு விநியோகம் செய்து வந்தோம், இதனை ஒரு சேவையாகவே செய்து வருகின்ருேம். எல்லாவற்றையும் நன்கு கணக்குப் பார்த்தால் இது சமாஜத்திற்கு கட்டுப்படியாகாது.

உருளைக் கிழங்கு உற்பத்திற்கு தேவையான உரம் கடனுக கொடுத்து 6 மாதத்தின் பின் அறவிட்டிருக்கிருேம். இதில் லாபம் இல்லை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவே இதனைச் செய்கின்ருேம்.

[illegible] யப்பட்டது. சென்ற [illegible] சந்தை விலை உத்தரவாத விலையிலும் பார்க்க கூடுதலாக இருந்தது.

கரைச்சி விவசாய உற்பத்தியாளர் சங்க பிரதிநிதி திரு. கு. வி மகா[illegible] சாட்சியமளிக்கையில் கூறியதாவது: வடபகுதியில் உருளைக் கிழங்கை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்கிருர்கள். உருளைக் கிழங்கு உற்பத்தியை பெருக்குவதன் மூலம் அரிசி உணவைக் குறைத்துக் கொள்ளலாம். இதன்மூலம் மக்கள் அரசாங்கத்திற்கும் உதவி செய்ய முடியும். விதை உருளைக் கிழங்கு கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும்.

இன்று மாலை பதில் அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

உருளைக்கிழங்கு உற்பத்தியைப் பெருக்குவதற்கு, குளிரூட்டும் ஸ்ரோர் ஒன்று அமைத்துத் தரவேண்டும்' புகையிலை உற்பத்திகுறைந்து போவதால் கிழங்கு உற்பத்தி அதிகரிக்கச்செய்ய முடிந்துள்ளது. வடபகுதியில் 2,000 ஏக்கர் நிலத்தில் கிழங்கு உற்பத்திசெய்ய முடியும். விதைகிழங்கைப் பேணிவைக்கவும், அறுவடைசெய்யப்பட்ட கிழங்கைப் பேணவும் ஸ்ரோர் அமைத்துத்தர வேண்டும்

விவசாய அதிகாரி திரு. ஏ. சபாரத்தினம், வடமாகாண விவசாய அதிபர் திரு. பி. மாணிக்கவாசகர், நியமன எம். பி. திரு. எம். ஸி. சுப்பிரமணியம் ஆகியோரும் வந்திருந்தனர். காணி உதவி அமைச்சர் இன்று மாலை திருநெல்வேலி கமத்தொழில் பாடசாலைக்கும் சென்று பார்வையிட்டார்.

திரு. வி, நல்லதம்பி, திரு கே நடராசா ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

# அரசியல் தலைவர்களை ஒன்று சேர்க்கும் முயற்சி

## 15-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரசியல் தலைவர்களின் ஒரே எண்ணப்பொது நோக்கை ஒருமுகப்படுத்த யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் இம்மாதம் 15-ம் திகதி 'தமிழ் மகாநாடு' ஒன்று நடைபெறவிருக்கிறது

இம் மகாநாட்டிற்கு தமிழ் ஆட்சிமன்ற உறுப்பினர்களும் மூதவை உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

அன்று காலை 9 மணிக்கு நீதியரசர் வி. மாணிக்கவாசகர் தலைமையில் தமிழ் மகாநாடு ஆரம்பமாகும். நீதியரசர் சிவசுப்பிரமணியம், வைத்தியகலாநிதி வி ரி பசுபதி பதில் தலைவர்களாக இருப்பார்கள்

தலைமை உரையைத் தொடர்ந்து அரசியல் நிர்ணய சபைக்குச் சமர்ப்பிப்பதற்கான மகஜர் பற்றிக் கலந்துரையாடப்படும், மகஜரை அடிப்படையாகக் கொண்டு 10 தீர்மானங்கள் தீர்மானிக்கப்படும்

முன்னுள் பேராசிரியர் திரு. கே. நேசையா, முன்னுள் மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை, மட்டக்களப்பைச் சேர்ந்த கே. கணபதிப்பிள்ளை ஆகியோர் அமைப்புக் குழுவிற்காக இம்மகாநாட்டிற்கான அழைப்புக்களை அனுப்பியுள்ளனர்.

"கீழ்த்தர, பத்திரிகைகள்

# நம் நாட்டிலும் வெளிவராதிருக்க நடவடிக்கை வேண்டும்"

மாவிட்டபுரம், சனி

'தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் கீழ்த்தரமான பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் அதே வேளையில் நம்நாட்டிலிருந்து அவற்றிலும் கீழாக அருவருக்கத்தக்க விடயங்களை வெளியிடும் பத்திரிகைகள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்'

இவ்வாறு யாழ். இலக்கிய நண்பர்கழக செயலாளர் வே. தேவதாசன், பிரதம மந்திரி, கலாச்சார மந்திரி, தபால் மந்திரி தகவல். ஒலிபரப்புமந்திரி. திரு. எச், எம். பி. மொஹிதீன் ஆகியோருக்கு அனுப்பியுள்ள மகஜரில் கோரியுள்ளார்.

அம்மகஜரில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலக்கிய ரீதியில் கீழ்த்தரமான பத்திரிகைகள் எந்த மொழியில் வந்தாலும்தடை செய்யப்படவேண்டும். அத்தகைய பத்திரிகைகள் தென்னிந்தியாவிலிருந்து வருவன மட்டும்தான் என்று எவரும் கூறமாட்டார்கள். தடைசெய்யப்படும் பத்திரிகைகளைப் போன்று எதிர் காலத்தில் நமது நாட்டிலேயே புதிதாகத் தோன்ருதவாறு ஆவன செய்யவேண்டும். இப்படிச் செய்தால் அரசாங்கம் இவ் விஷயத்தில் எடுக்கும் நடவடிக்கை வகுப்புவாத ரீதியானது என்று எழுப்பப் படும் சந்தேகம் மறைய வழிபிறக்கும்,

இறக்குமதியாகும் பத்திரிகைகள் மீதும் நம்நாட்டு பத்திரிகைகள் மீதும் ஒரே மாதிரியான நடவடிக்கைகள் ஒரேசமயத்தில் எடுக்கப்பட்டாலன்றி இவ்விடயத்தில் முற்போக்கான எண்ணம் கொண்ட எவரும் திருப்தியுற முடியாது என்றும், எந்தப் பத்திரிகைகள் மீதும் எத்தகைய நடவடிக்கள் எடுக்கப்படவேண்டுமென்பதைச் சிபார்சு செய்யும் பூரண அதிகாரம் ஈழத்து எழுத்தாளர்களின் கையிலேயே ஒப்படைக்கப்படவேண்டுமென்றும், இதற்காக ஈழத்தின் பல மான எழுத்தாளர் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட மக்கள் சபையென்று நியமிக்கப்படவேண்டுமென்றும், எந்த எழுத்தாளர் சங்கங்கள் இதில் பிரதிநிதித்துவம் வகிக்க வேண்டுமென்பதை இலங்கைசாகித்திய மண்டலக் குழுவினரின் ஆலோசனையின் பேரில் முடிவு செய்யலாமென்றும் மற்றும் பல ஆலோசனைகளும்மகஜரில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

......

## "தடை செய்க"

மாவிட்டபுரம், சனி

''இந்தியாவிலிருந்து தரங்கெட்ட புத்தகங்களையும், சினிமாப் படங்களையும் இறக்குமதி செய்வதால் தமிழ்-சிங்கள மக்களின் கலாச்சாரங்கள் சிதைவுற வழியேற்படுவதால் அவற்றை முற்ருகத் தடை செய்ய வேண்டும்'' என யாழ். சோஷலிச முன்னணி தீர்மானம் நிறைவேற்றியது

# 'எமது கலாச்சாரங்களுக்கு குந்தகம் விளைக்காதீர்'

உடுவில், சனி

''தமிழ் வளர்ச்சியை அடிப்படையாக வைத்து வெளியிடப்படும் எந்த ஒரு பத்திரிகையையோ, சஞ்சிகையையோ, அது எந்த நாட்டிலிருந்து வெளிவந்தாலும் அதற்கு இறக்குமதித் தடையோ கட்டுப்பாடோ விதிப்பது தமிழ் வளர்ச்சியைத் தடுப்பதாகவே அமையும். எனவே அரசாங்கம் இந்தியத் தமிழ்ச் சஞ்சிகைகளைக் கட்டுப்படுத்தும் அல்லது தடைசெய்யும் நோக்கத்தைப் புனராலோசனை செய்யவேண்டும்'' எனக் கோரும் தீர்மானம் உடுவில் தமிழாராய்ச்சிக் கழகக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவர் திரு. துரைசிங்கம் செல்லக்குமாரகுலசிங்கம் தலைமையில் உடுவில் வெட்டுக்கட்டைப் பிள்ளையார் கோவிலில் கழகக் கூட்டம் நடைபெற்றது.

''தமிழகத்திற்கும், ஈழத் தமிழினத்திற்கும் கலைகலாச்சார பண்பாடுகளில் நெருங்கிய தொடர்பு இருப்பதை யாவரும் அறிவர். அரசாங்கம் இன்று மேற்கொள்ள இருக்கும் பத்திரிகைக் கட்டுப்பாடு, எமது கலைகலாச்சாரப் பண்பாடுகளுக்கும், ஈழம்-தமிழகத் தொடர்புக்கும் இடையூறுவிளைவிக்கும். எனவே கலை கலாச்சார வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் இன்றைய அரசாங்கம் பத்திரிகைகளை இறக்குமதிசெய்வதைத் தடைசெய்து எமது கலை கலாச்சாரங்களுக்குக் குந்தகம் விளைவிக்கவேண்டாம்' என்றும் அத்தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானம் தபாலமைச்சருக்கும், கலாச்சார அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

## சஞ்சிகைகள் இறக்குமதியை அரசாங்கம் பொறுப்பேற்கும்?

கோட்டை, சனி

வெளிநாட்டு சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் இறக்குமதிசெய்து விநியோகம் செய்தலை அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்று கவனிக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தைத் தற்போது அரசாங்கம் ஆராய்ந்துவருகிறது. அரசாங்கம் இவ்வாறு செய்வதால் அன்னிய செலாவணி வீணுவதைத் தடுக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இத்துடன் மேற்படி சஞ்சிகைகள் பத்திரிகைகள் வெளியிடுபவர்களுக்கு நேரடியாகச் சாந்தா செலுத்திப் பெறுவது குறித்தும் அரசாங்கம் ஆலோசனை நடாத்துகிறது, இந்த இரண்டாவது தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் சந்தாக்காரர்கள் உபதபாற் கந்தோர்கள் மூலமும் தங்கள் சந்தாக்களைச் செலுத்தி சஞ்சிகைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்திய சஞ்சிகைகள் இறக்குமதி குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தபால்தந்தித் தொடர்பு அமைச்சர் திரு. குமாரசூரியர் அரசாங்கத்தால் கேட்கப்பட்டுள்ளார். திரு. குமாரசூரியர் இவ்விடயமாகத் தனது கருத்தைத் தெரிவிக்கையில்; அறிவுக்கு தடைவிதிக்கவேண்டுமென்பது நோக்கமல்ல. வாசகர்களுக்குப் பயன்படத்தக்க எல்லா சஞ்சிகைகளும் இறக்குமதிசெய்ய வழிவகை செய்யப்படும் என்று கூறினுர்.

தபால் அமைச்சர் சஞ்சிகைகள், பத்திரிகைகள் இறக்குமதி குறித்து முன்னணியிலுள்ள தமிழ் எழுத்தாளர்களோடு பலதடவைகள் பேச்சுவார்த்தைகளும் நடாத்தியுள்ளார்.

......

சேகுவேராக்களின்

## ஆயுதங்களைப் பொலிசார் கைப்பற்றினர்

கோட்டை, சனி

பாணந்துறையில் உள்ள ஒருவீட்டில் பெருந்தொகையான தோட்டா, வெடிமருந்து முதலியவற்றைப் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

சேகுவேராய இக்கத்தினர் தங்கள் தோட்டாக்கள் வெடிமருந்துகள் ஆகியவற்றை வைப்பதற்கு குறிப்பிட்ட ஒரு வீட்டையே பயன்படுத்துகிருர்கள் எனக் கிடைத்த ஒரு செய்தியைக் கொண்டு இரகசியப் பொலிஸ்காரர்கள் மேற்படி வீட்டை சோதனையிட்டுஅங்குபெரும் அளவில் தோட்டாக்களையும் வெடிமருந்துகளையும் கண்டெடுத்தனர்.

# வெளிமாகாணங்களுக்கும் கடன் இணக்க சபைகள்

கோட்டை, சனி

வெளிமாகாணங்களிலும் கடன் இணக்க சபைகள் நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தற்போது கொழும்பில் மாத்திரம் ஒரு கடன் இணக்க சபை இருக்கிறது. இது 1941-ம் ஆண்டு நிறுவப்பட்டது.

கொழும்பு தவிர்ந்த மற்றும் வெளி மாகாணங்களில் உள்ளவர்களுக்குகடன் பெறுவதில் ஏற்படும் கஷ்டங்களை நீக்குவதற்காகவே அரசாங்கம் நாட்டின் பல பகுதிகளிலும் கடன் இணக்க சபைகள் நிறுவப்படவிருக்கிறது.

கண்டி, காலி, திருக்கோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் மேற்படி சபைகள் விரைவில் நிறுவப்படவுள்ளன. கொழும்பிலுள்ள கடன் இணக்க சபை தற்போது முதன் முதலாக சிங்களத்தில் செயலாற்ற ஆரம்பித்துள்ளது.

— —

## ரஷ்யா சென்ருர்

மாவிட்டபுரம், சனி

விஞ்ஞானத் துறையில் உயர் கல்வி பெறுவதற்காக ஏழாலையை சேர்ந்த செல்வி அமிர்தலிங்கம் லிங்கேஸ்வரி ரஷ்யா சென்றுள்ளார்.

கொழும்பு விவேகானந்தக் கல்லூரியில் ஆரம்பக் கல்வி பயின்ற இவர். ஏழாலை மகாவித்தியாலயம், மருதனைமடம் இராமநாதன் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியாவார், இவர் விளையாட்டுத் துறையிலும் மற்றும் கல்வித்துறையிலும் சிறந்து விளங்கினுர்.

......

## சிறுமிமரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தேங்காய் தலையில்விழுந்து சிறுமி ஒருத்தி மரணமானுள்

யாழ்ப்பாணம் வண்ணுர் பண்ணையைச் சேர்ந்த வேலு என்பவரின் 4 வயது மகளான இந்திரதேவி யே மரணத்துக்குள்ளானுள்.

விசாரணையில்வளவில் இன்னெருரு சிறுமியுடன் விளையாடிக் கொண்டிருக்கையில் உயர்ந்த தென்னையிலிருந்து விழுந்த தேங்காய் தலையில் விழுந்தமையால் மயங்கிய நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்ட இந்திரதேவி மரணமானுள் என்று தெரியவந்தது.

விபத்தினுல் ஏற்பட்ட மரணமென மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் தீர்ப்பு வழங்கினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

அஸ்ருலாப், அஸ்ருவயிற் 2 மாதக் கோழிக் குஞ்சுகள் கிடைக்கும். விலை ஒன்றுக்கு ரூபா 6/- இரத்தினசிங்கம், செட்டித்தரை ஒழுங்கை, நெல்லியடி. கரவெட்டி. 2923

இரண்டு மாத சையிக்ஸ் (Sykes) சேவற் குஞ்சுகள் கிடைக்கும். ஒவ்வொன்றும் ரூபா 3/- இரத்தினசிங்கம், செட்டித்தரை ஒழுங்கை, நெல்லியடி, கரவெட்டி. 2928

யாழ்ப்பாணம், பலாலி வீதி, இரண்டாம் ஒழுங்கையில் நவீன முறையில் அமைக்கப்பெற்ற வீடும் இரண்டரைப் பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. தரகர் தேவை இல்லை. விபரங்களுக்கு க. தம்பிப்பிள்ளை, 2924

யாழ்ப்பாணம், 152/2, பாங்ஷால் வீதியிலுள்ள ஸ்ரீ தேவகி இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்தின் தளபாடங்கள் பொருட்கள் அனைத்தும் கடையுடன் ஒப்படைக்கப்படும். மின்சார வசதியுண்டு. மேற்குறிப்பிட்ட விலாசத்தில் தொடர்பு கொள்க. A.P.பெஞன்டோ. 2918

### தவறிவிட்டது

24-8-70 மாலை கீரிமலை - யாழ்ப்பாணம்பஸ்ஸில்காணி உறுதிகளடங்கிய எனது பையொன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சி. விஜயபாலசிங்கம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், த. பெ. இல.520, கொழும்பு என்னும் முகவரிக்குத் தெரிவிப்பின் பெரு மகிழ்ச்சியுடன் அவரைக் கௌரவித்துத் தகுந்த சன்மானமும் தரப்படும். 2927

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 6—9—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-30 கிறிஸ்தவநிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 துதிப்பாடல்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-30 விவசாயகேள்வி பதில், 7-00 வயலின், 7-15 நாடகம், 7-45 மெல்லிசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 சித்திரம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு 'பிரஜைகளும் அடிப்படை உரிமைகளும்' என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கொன்று இம்மாதம் 14-ந் திகதி யாழ் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் சோஷலிச ஆய்வுக்குழு ஒழுங்கு செய்துள்ள இக் கருத்தரங்கில் கோப்பாய் எம்.பி. திரு. எஸ் கதிரவேலுப்பிள்ளை, வட்டுக்கோட்டை எம்.பி. திரு ஆ தியாகராசா மக்கள்வங்கி அதிபர் ஹெக்ரர் அபயவர்த்தன, திரு. வி. பொன்னம்பலம் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 8 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்— ஜெயந்தி நடித்த
இரு கோடுகள்

ராஜா - யாழ்ப்பாணம்
(10-30, 2-30, 6-30, 9-45
* துடிக்கும் இரத்தம் பேசட்டும்!
* துணிந்த நெஞ்சம் நிமிரட்டும்!!
* உழைக்கும் வர்க்கம் சேரட்டும்!!!
* உரிமை உடமை காணட்டும்!!!

# 'ஈழநாடு' விளையாட்டுவிழா இன்று நடைபெறும்போட்டிகள்

— நமது விளையாட்டு நிருபர் 'தேவா' —

யாழ்ப்பாணம், ஞாயிறு 'ஈழநாடு' விளையாட்டுப் போட்டிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன. இப்போட்டிகளின் இறுதி நிகழ்ச்சிகள் இம்மாதம் 11-ம் திகதி நடைபெறும்.

எமது விளையாட்டுப் போட்டிகளுக்கு, யாழ். நகரிலுள்ள பல பிரமுகர்கள் பரிசுகள் வழங்கமுன்வந்துள்ளார்கள் அவர்களின் விபரம் வருமாறு:

மில்லைவக்ற் சேப் ஸ்தாபனம், 'அண்ணா' கோப்பி ஸ்தாபனம், டாக்டர் ஏபரகாம் (எம். எம். ஸி), டாக்டர் பிலிப், திரு எம். எஸ். பேரின்பநாயகம் (எம். எம். ஸி), ஒரு நன்மை விரும்பி.

### விளையாட்டுக்குழு நிர்வாகிகள்

விளையாட்டு விழா அமைப்பாளர் குழுவில் கீழ்க்காணுவோர் இடம் பெற்றுள்ளனர்: உதவி பொலிஸ் அதிபர் திரு. டபிள்யு. பி இராஜகுரு, யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. ஈ. சபாலிங்கம், சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா. மதுரநாயகம், டாக்டர் பாலன் செல்லையா, திருமதி குகதாசன், திரு. ஈ. கே. குமரையா, திரு. எஸ். எம். கோபாலரத்தினம், இன்ஸ்பெக்டர் எஸ். மாணிக்கம்.

### இன்றைய கரபந்தாட்ட ஆட்டம்

இன்று நடைபெறும் கரபந்தாட்டப் போட்டியில் கீழ்காணும் கோஷ்டிகள் மோதிக்கொள்ளுகின்றன.

யாழ். மத்திய கல்லூரி கரபந்தாட்டத் திடலில் மோதும் கோஷ்டிகளின் விபரம்:

4-30-க்கு: இணுவில் இந்து வி. க. — ஊர்காவற்றுறை காந்திஜி வி. க, 'ஏ'

5-30-க்கு: சுன்னாகம் கணேஸர் வி. க. — கே. கே. எஸ். யுனைட்டட் வி க

6-30-க்கு: யாழ். கரபந்தாட்ட வி. க. 'பி' — மீசாலை கணேஸா வி. க.

7-30-க்கு: சாவகச்சேரி வளர்மதி வி. க. இணுவில் ஸ்ரீ முருகன் வி. க.

8-30-க்கு: உருத்திரபுரம் வி. க. — CC-DD வின்னஸ்.

யாழ். பொலிஸ் கரபந்தாட்டத் திடலில் மோதும் கோஷ்டிகளின் விபரம்:

4-30-க்கு: தையிட்டி ஸ்ராஸ் வி. க. — பருத்தித்துறை பொலிஸ் யுனைட்டட்.

5-30-க்கு: நீர்வேலி யுனைட்டட் 'ஏ' — கரவெட்டி யூனியன். (தே. நி)

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 21-ம் திகதி (6-9-70)

மேஷம்- குடும்ப வழியால் மனதிற்கு நின்மதி பிறக்கும். சிறப்பான தினம்.

ரிஷபம்- நம்பிக்கை மோசடி நடக்கும். தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும்.

மிதுனம்- இலட்சியப் பாதையில் வெற்றி நடைபோடுவீர். பதவி உயர்வுக்கும் இடமுண்டு.

கடகம்- ஒளிபரப்பும் வாழ்க்கை உறவினர்கள் மத்தியில் ஒற்றுமை மலரும் பொன்னான தினம்.

சிம்மம்- பசுமையான சம்பவம் நடைபெறும். களஸ்திரவழியால் நன்மைகள் கிடைக்கும்.

கன்னி- விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும் இன்று சும்மா இருப்பதே சுபம்.

துலாம்- இதயத்திற்கு இதம் தரும் செய்தி ஒன்று கிடைக்கலாம் செலவுகள் கூடுதலாக இருக்கும்.

விருட்சிகம்- வித்தையில் வெற்றிகாணும். பொதுமக்கள் தொடர்புடன் புகழ் வந்துசேரும்

தனுசு- புதிய கோணத்திலிருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு. காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள்.

மகரம்- உறவு முறைகளில் பிளவுகள் தென்படும். இனத்தவர்களுடன் பகைத்துக்கொள்ளுவீர்கள்.

கும்பம்- வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அது மேலும் குட்டி போடும் குதூகலமான தினம்.

மீனம்- இதயம் எரிமலையாகும் எதிரிகள் தாக்குவர். அதிக பேச்சைத் தவிர்த்து

## "விளையாட்டுத்துறையில் பெற்றோரின் அறியாமையை ஒழிக்க வேண்டும்"

சுழிபுரம், சனி

'உடல் நலமும், உள்ளத் தெளிவும் நல்ல உடற்கட்டும் பெற்றுவாழ விளையாட்டுகள் மிக இன்றியமையாதன. இதை உணராத பெற்றோர்களில் சிலர் தம்பிள்ளைகளை விளையாட்டுத்துறையில் ஊக்குவிக்கத் தயங்குகிறார்கள். உருண்டையான ஒரு பந்தை விளையாட்டு மைதானத்தில் போட்டு அங்குமிங்கும் உதைப்பதினால் என்ன பயன் என்று கேட்கும் ஒரு சிலர் இருக்கவே செய்கிறார்கள். இந்த அறியாமைக்கு முழுக்குப் போட்டு பிள்ளைகளை விளையாட்டுத்துறையில் ஈடுபட அனுமதிக்க அவர்களை ஊக்குவிக்க இயன்றளவி[illegible] முயற்சி எடுக்க வேண்டும்' [illegible] மாதகல் மேற்கு சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிப் [illegible] பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. வ சதாசிவம் கூறினார். ஆசிரியர் திரு. மு. ஓங்காரசோதி பேசுகையில் 'பாடசாலைகளில் விளையாட்டு கட்டாய பாடமாகப் போதிக்கப்படுவதற்குரிய ஒழுங்குகளைக் கவனிப்பதற்காகக் கல்வியமைச்சு மாவட்ட ரீதியில் உடற் கல்வி அதிகாரிகளை நியமித்துள்ளது. பாடசாலைகளுடன் சேர்ந்து சனசமூக நிலையங்களும், விளையாட்டுக் கழகங்களும் இளையோர்மத்தியில் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க முன்வரவேண்டும் என்றார்

திருவாளர்கள் கதிர் செல்வநாயகம். அ. கந்தசாமி, வ. சிவபாதம் உட்[illegible] பலர் பேசினர். போட்டி[illegible] வெற்றி பெற்றவர்களுக்கு நிலையத்தலைவர் பரிசில்களை [illegible]னர்

## இயக்கங்களைக் கண்காணிக்க

# செய்திச் சுருக்கம்

### லட்சம் பேர் ஸ்டிரைக் செய்வர்

பதுளை, சனி

கீனக்கொல்லைத்தோட்டக் கலவரத்தில் பொலிஸாரின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியான இரு இளைஞர்களின் சடலங்களை தோட்டத்திற்குக் கொண்டுபோக முடியாதபடி பதுளைப் பொலிஸார் தடைவிதித்ததனால்பிரேதங்கள் பதுளை மயானத்தில் மதஅனுஷ்டானங்கள் எதுவுமின்றி அடக்கம் செய்யப்பட்டன.

கீனக்கொல்லைத் தோட்ட விவகாரத்துக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக வருகிற 9 ந் திகதிசுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் அடையாள வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ளனர்,

### காந்திசிலை இன்று திறப்பு விழா

ஆலிஎல நாரங்கலை சாந்தி நாடக மன்றத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட மாகாத்மாகாந்தி திருஉருவச் சிலையின் திறப்பு விழா இன்று நடைபெறுகிறது.

இவ்விழாவில் செனட்சபை தலைவர் ஏ. ரத்நாயகா. இ. தொ, கா. பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, இ. தொ கா. மாதர்சங்கத்தலைவி செல்வி எம் சங்கரவடிவு ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

### இடமாற்றம்

பன்வில மாவட்ட இ. தொ. கா. பிரதிநிதியாகக் கடமையாற்றிய திரு. ஏ. சுப்பிரமணியம் மாத்தளை மாவட்டப் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருடைய இடத்துக்கு திரு, பத்மநாதன் நியமனம் பெற்றுள்ளார்.

### இளநீர் பறிக்கச் சென்று...

காலி-கிரிமெட்டிமுல்ல என்ற இடத்தில் வசிக்கும் மாணவன் ஒருவர் இளநீர் பறிப்பதற்காக மரத்தில் ஏறியபோது கைதவறி விழுந்து மரணமானார்.

மரணவிசாரணை அதிகாரி திரு எச். ஹெரி பீட்டர் விசாரணையின் போது மரத்திலிருந்து விழுந்ததால் மரணம் ஏற்பட்டது எனத் தீர்ப்பளித்தார்

### ஒருதினம் பொது மக்களுக்கு

கோகாலை கச்சேரியில் ஒருவாரத்தில் ஒரு தினம்

இந்தியாவில்

## ஆசிரியர் வார விழா: 94 பேருக்குப் பரிசு

### ஒன்பது பேர் தமிழ் நாட்டவர்

புதுடில்லி, செப். 5

இந்தியாவில் வருடந்தோறும் கொண்டாடப்படும் ஆசிரியர்கள் வார விழா இவ்வாரம் முழுவதும் தொடர்ந்து கொண்டாடப்படுகிறது. முன்பு இவ்விழா ஒருநாள் மட்டும் கொண்டாடப்பட்டது.

இவ் விழாவையொட்டி, ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் 54 பேருக்கும்., உயர்கல்வி ஆசிரியர்கள் 40 பேருக்கும் சமஷ்கிருத ஆசிரியர்கள் 5 பேருக்கும் இந்திய அரசின் சிறந்த ஆசிரியசேவைக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆரம்பப் பள்ளிஆசிரியர்கள் 6 பேரும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் 3 பேரும் இப்பரிசைப் பெறுகின்றனர்.

இப்பரிசு பெறுவோருக்கு நற்சான்றிதழும் ரூபா 500 பரிசாகக் கொடுக்கப்படும். இவ்விழா முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. சர்வபள்ளி இராதாகிருஷ்ணன், ஆசிரியராக இருந்து உயர்நிலையை அடைந்ததைக் கொண்டாடும் வகையில் அவரது பதவிககாலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று அவரது பிறந்த தினமுமாகும். அவரது பிறந்தநாளை ஒட்டி இந்திய குடியரசுத் துணைத்தலைவர் வாழ்த்துச் செய்தி ஒன்றை அவருக்கு அனுப்பிவைத்துள்ளார்,

இவ்விழாவுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி, பிரதமர் இந்திரா காந்தி, கல்வி அமைச்சர் திரு. வி.கே. ஆர். வி. ராவ் ஆகியோர்வாழ்த்துச்செய்தி அனுப்பிவைத்தனர்.

ஆசிரியர்களுக்கு நிதி உதவியை மேலும் கூட்டவேண்டுமென திரு வி. வி. கிரி தனது வாழத்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

## நாட்டை முன்னேற்ற முடியாமல் போனது ஏன்?

### அமைச்சர் தரும் விளக்கம்

ஹக்மன, சனி

'முதலாளித்துவ அமைப்பின் கீழ் துன்பத்தில் ஆழ்ந்துகிடந்த மக்கள், மக்கள் அரசாங்கத்தை நிறுவியதன் மூலம் முன்னேற்றத்துக்கு வழி அமைத்துக்கொண்டார்கள் என்றாலும் நாட்டை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன் நம் நாட்டுக்குப் பொருத்தமான அரசியல் அமைப்புச் சட்டமொன்றினை உருவாக்குவது முதலில் அவசியமாகும்.'

இவ்வாறு முல்கிரிகல ஆட்சிமன்ற உறுப்பினரும், கடற்றொழில் அமைச்சருமான திரு. ஜோர்ஜ் ராஜபக்ஷ கூறினார்.

தம்மை வரவேற்பதற்காக கெபல்லக்கெட்டியா என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அவர் இவ்வாறு பேசினார்.

வெளிநாட்டு ஏகாதிபத்திய வாதிகளினால் ஏற்படுத்தப்பட்ட முந்திய ஆட்சி அமைப்பின் கீழ் நாட்டை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை விரைவில் செய்வது கஷ்டமாகவிருந்தது. இனிமேலாவது நாட்டுக்கு இந்த அரசினால் நன்மை ஏற்படுவதற்கு அரசாங்கத்தை மக்கள் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

## 'இசைவாணர்கள் ஒழுக்கத்தை பேண வேண்டும்'

யாழ்ப்பாணம், சனி

இறைவன் இசைவடிவானவன். இசையே தெய்வமாகவும் தெய்வமே இசையாகவும் அமைந்திருக்கின்ற தன்மையுடையது. இசையை இசைவாணர்கள் முறையே கற்று ஒழுக்கசீலராகக் கடமையாற்ற முற்படவேண்டும்' [illegible] போது யாழ். உதவி மேயர் திரு. ஆ துரைராசசிங்கம் தெரிவித்தார்.

'ஆண்டவன் எல்லையற்ற பூரணனாகத் திகழ்வதுபோல் இசையும் எல்லைகாண முடியாதது. இசையாளர்கள் போட்டிகள் பொறாமைகளுக்கு இலக்காகாது நடந்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(10-30, 2-30, 6-30, 9-45

* துடிக்கும் இரத்தம் பேசட்டும்!
* துணிந்த நெஞ்சம் நிமிரட்டும்!!
* உழைக்கும் வர்க்கம் சேரட்டும்!!!
* உரிமை உடமை காணட்டும்!!!

சோகத்தாய் சாரதாவின் உணர்ச்சி நடிப்பைக் காண வாரீர்.

செம்மீன் ஷீலா, சாரதா, மது. பிரேம்நசீர், திக்குரிச்சி மற்றும் பலர் நடித்த

இந்திய ஜனாதிபதியின் ஊர்வசி பரிசுபெற்ற

# துலாபாரம்

(மலையாளம்)

(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)



## வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்

மற்றும்பலர் நடித்த

'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'

# துணைவன்

கதை வசனம் பாலமுருகன் — சங்கீதம் K.V.மகாதேவன்

தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


துக்கொள்ளுவீர்கள்.

கும்பம்- வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அது மேலும் குட்டி போடும் குதூகலமான தினம்.

மீனம்- இதயம் எரிமலையாகும் எதிரிகள் தாக்குவர். அதிக பேச்சைத் தவிர்த்து காரியத்தில் கண் வைக்கவும்

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிப்போயா 2-30
எம். ஜி. ஆர்—பத்மினி நடித்த
ரதணி சம்யுக்தா

## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர்-கே. ஆர். விஜயா நடித்த
விவசாயி

## MANOHARA

Jaffna
Daily 4-45, 7 & 9-45 P.M.
Richard Benjamin
in
GOOD BYE COLUMBUS
[Color]

## REGAL JAFFNA

Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya, Pre-poya 4 Shows
Richard Harris
Julie Andrews
in
HAWAII
(Color)


ளவி... பற்றி எடுக்க வேண்டும்' ...ன மாதகல் மேற்கு சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிப் பரிச... சாமி, வ. சிவபாதம் உட்பட பலர் பேசினர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு நிலையத்தலைவர் பரிசில்களை வழங்கினர்.

## இயக்கங்களைக் கண்காணிக்க பொலிஸ் பிரிவுகள்

கோட்டை, சனி

நாடெங்கும் 61 உளவறியும் பொலிஸ் பிரிவுகள் நியமிக்கப்பட்டுள்ளன. இப்பிரிவுகள் 'சேகுவேரா' போன்ற இயக்கங்கள் தலைதூக்கவிடாமல் பாதுகாத்துக்கொள்ளும்.

இந்த உளவறியும் 61 பொலிஸ் பிரிவுகளையும் பொலிஸ் மா அதிபர் திரு. ஸ்ரான்லி சேனநாயக்கா நியமித்துள்ளார்.

நாட்டில் அசம்பாவிதங்களைத் தடுத்து நடவடிக்கை எடுக்க இப்பிரிவுகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது

இன்று கொழும்பில்

## தமிழ்ப் பெரியார்கள் விழா

பம்பலப்பிட்டி, ஞாயிறு

இன்று இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கழகத்தினரால் பாரதி, வன்னியர், அண்ணா ஆகிய தமிழ்ப் பெரியார்களின் விழா பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறுகிறது

இவ்விழாவுக்கு செனட்டர் திரு. எஸ். நடேசன் தலைமை வகிப்பார். தலைமையுரையை அடுத்து திரு. அ. அமிர்தலிங்கம், திரு மு திருநாவுக்கரசு, கவிஞன் காசி ஆனந்தன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

'அண்ணா' என்னும் பொருளில் கருத்தரங்கு நடைபெறும். திரு. க. நவசோதி, செல்வி கலாநிதி தேவா, திரு. சி. துரைராசா, திரு. கரிகாலன், செல்வி சாந்தினி லோகிதராஜா, திரு. அஷ்ரவ், திரு. கரவை கிழான் ஆகியோர் இதில் பங்கு பற்றுகின்றனர்

## உப தபால் நிலையம் தரமுயர்த்தப்படும்?

ஒட்டுசுட்டான், சனி

மூள்ளியவளை உப தபால் நிலையம் விரைவில் தரமுயர்த்தப்படவுள்ளது. இத்தபால் நிலையத்தை தரம் உயர்த்துவிப்பதற்கான நடவடிக்கைகளில் வவுனியா ஆட்சிமன்ற உறுப்பினர் எம். எக்ஸ். செல்லத்தம்பு ஈடுபட்டிருந்தார்.

— —

## நிர்வாகிகள்

சரவணை, சனி

சுருவில் இளைஞர் விளையாட்டுக்கழக அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. வி சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள்: இ. மாணிக்கம், வி நாகலிங்கம் ச. ஐயாத்துரை, கே. ஏகாம்பரம், தலைவர்: பி. சோமசுந்தரம், இணைச்செயலாளர்கள்: ம, ஆசீர்வாதம். கி. திருவருள், தனாதிகாரி: மா. தவயோகராசா


சர்வதேச திரைப்பட அரங்கில் பாராட்டுப்பெற்ற படம். தென்னகத்திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்.

# யாழ்-வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன் ★ ஜெய்சங்கர்
ராஜஸ்ரீ ★ வெண்ணிறஆடைநிர்மலா
நடித்த

# பூவா தலையா


...நிலிருந்து விழுந்ததால் மரணம் ஏற்பட்டது எனத் தீர்ப்பளித்தார்

### ஒருதினம் பொது மக்களுக்கு

கோகாலை கச்சேரியில் ஒருவாரத்தில் ஒரு தினம் பொது மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய நடவடிக்கையை கேகாலை அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளதனால் பொது மக்கள் இலகுவாகத் தகது காரியங்களை முடித்துக் கொள்கின்றனர்.

### ஆட்சியாளர்களின் கடமை

''இந்நாட்டு சமுதாயத்திலே மறுமலர்ச்சி தீபம் ஏற்றவேண்டும் என்ற ஒரே இலட்சியத்துடன் தான் நாட்டு மக்கள் அரசாங்கத்தை உருவாக்கினார்கள் மக்களின் கருத்துக்கு செவி சாய்த்து நடப்பது எமது இன்றியமையாத கடமையாகும்''.

இவ்வாறு அகவத்தபுதிராஜ பிரிவினையில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் பேசிய அரசியல் விவகார அமைச்சர் திரு. கொல்வின் ஆர்டி. சில்வா குறிப்பிட்டார். ......

## கனடாவில் இலங்கைத் தூதுவர்

கோட்டை, சனி

கனடாவின் இலங்கைத் தூதுவராக திரு. பி. எச். வில்லியம் சில்வா நியமிக்கப்படவுள்ளார். 61 வயதான இவர் ஒரு வழக்கறிஞர் எஸ். டபிள்யு ஆர். டி பண்டாரநாயக்காவின் மந்திரிசபையில் அமைச்சராகப் பணிபுரிந்துள்ள இவர் தற்போது ஸ்ரீ ல. சு. கட்சியின் உபதலைவர்களுள் ஒருராவார்.

## வலைத்திருட்டு

அம்பன், சனி

தாளையடியைச் சேர்ந்த பிலிப்பு அந்தோனிப்பிள்ளை என்பவர் தன்னுடைய 6000 ரூபா பெறுமதியான வலைகள் கடலில் வைத்து களவாடப்பட்டு விட்டதாக தாளையடி மீன்பிடிப் பரிசோதகரிடமும், கிராமசேவகரிடமும் புகார் செய்துள்ளார்.

— —

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. பத்துநாள் உற்சவத்திலும் கல்வயலூர் விநாசித்தம்பி கந்தபுராண விரிவுரை நடத்துவார்.

வன். இசையே தெய்வமாகவும் தெய்வமே இசையாகவும் அமைந்திருக்கின்ற தன்மையுடையது. இசையை இசைவாணர்கள் முறையே கற்று ஒழுக்கசீலராகக் கடமையாற்ற முற்படவேண்டும்'

இவ்வாறு நேற்று முன்தினம் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஆரம்பமான இசைவிழாவுக்குத் தலைமைவகித்துப்பேசும் ...தெரிவித்தார்.

'ஆண்டவன் எல்லையற்ற பூரணனாகத் திகழ்வதுபோல் இசையும் எல்லைகாண முடியாதது. இசையாளர்கள் போட்டிகள் பொறாமைகளுக்கு இலக்காகாது நடந்து கொண்டால் அதுவே அவர்கள் இசை உலகத்திற்குச் செய்யும் தொண்டாகும்' என திரு. துரைராஜசிங்கம் சொன்னார்.

மோட்டார் திணைக்களத்தில்

## தமிழ் மொழி பெயர்ப்பாளர் பதவி ஒழிக்கப்படும்?

சங்கானை, சனி

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் வாகனப்பதிவுப் புத்தகங்கள் சாரதி லைசென்ஸ் முதலியன சம்பந்தமாகத் தொடர்பு கொள்ளும் தமிழ் மக்கள், ஆங்கில மொழியிலேயே தொடர்பு கொள்கிறார்களாம். தமிழ்மொழிமூலம் தமிழ்மக்கள் இதுசம்பந்தமாகத் தொடர்புவைத்திருக்காத காரணத்தால் இத்திணைக்களத்திலுள்ள மொழிபெயர்ப்பாளர்பதவி ஒழிக்கப்படும் நிலையேற்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.


## KALANILAYA CAMBRIC

கலாநிலைய கேம்பிறிக்

## WRITING PADS

'லெற்றர் பாட்ஸ்'

நீல, வெள்ளைத் தாள்களில்
கோடிட்ட, கோடிடாத
பெரிய, சிறிய அளவுகளில்
விற்பனைக்குண்டு

மொத்த விற்பனைக்கு தொடர்புகொள்க:

# 'ஈழநாடு'

(வர்த்தக அச்சகப் பகுதி)

55, சிவன்கோவில் மேற்கு வீதி — யாழ்ப்பாணம்.

சில்லறையாகக் கிடைக்கும் இடம்:

## யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

420, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தமீறல்; எகிப்து மறுப்பு
# இஸ்ரேல் நடவடிக்கை பற்றி
# யு. எஸ். மௌனம் ஏன்?

நியூயோர்க், செப். 5

அமைதி முயற்சிகளுக்கான போர் ஓய்வு மீறல்களினால் ஏற்பட்டுள்ள நிலைமையைத் திருத்தி அமைக்கும்படி அமெரிக்கா சோவியத்யூனியனை வற்புறுத்தியிருக்கிறது.

போர் நிறுத்தத்தை மீறியதான குற்றச்சாட்டுக்களை ஐக்கிய அரபுக் குடியரசு பலமாக மறுத்திருக்கின்றது.

இதேவேளையில் எகிப்தியர் போர் நிறுத்த மீறல்களைச் செய்திருப்பதற்கான ஆதாரங்கள் தம்மிடமும் இருப்பதாகப் பிரிட்டனும் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல், போர் நிறுத்த மீறல்களை எண்ணிறந்த தடவைகள் செய்திருக்கின்றது. இதுபற்றி அமெரிக்காவுக்கு நன்கு தெரியும். ஆனல் அதுபற்றி அது பேசாமலே இருந்துவருகின்றது என்று ஐக்கிய அரபுக்குடியரசு கூறியிருக்கின்றது.

மேற்காசிய அமைதி முயற்சிகள் வெற்றிபெறுவதற்கு, போர் நிறுத்த மீறல்கள் உடனடியாக நின்ருகவேண்டும். போர் நிறுத்த மீறல்களின் காரணமாக எழுந்துள்ள நிலைமைகளை உடனே திருத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று சோவியத் யூனியனுக்கு அமெரிக்கா தெரிவித்திருக்கின்றது. இதே வேளையில் போர் நிறுத்த மீறல்கள் எதையும் ஐக்கிய அரபுக் குடியரசு செய்யவில்லை என்று அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு. றியார்ட் தெரிவித்திருக்கின்ருர். இஸ்ரேல் தான் பல தடவைகளிலும் போர் நிறுத்த மீறல்களைச் செய்திருக்கின்றது. இதைத் தெரிந்திருந்தும் அமெரிக்கா இதுபற்றி ஒன்றும் செல்லாமல் வாளாவிருகின்றது என்று திரு. றியாட் கூறினர்.

## லெபனுன் புகார்

சமீப காலத்தில் இஸ்ரேல் தமது பிரதேசத்தில் 58 தடவைகள் ஊடுருவல்களைச் செய்திருப்பதாக லெபனுன் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குப் புகார் தெரிவித்திருக்கின்றது. நேற்று லெபனுனின் தென் பகுதியில் இஸ்ரேலியர் நடத்திய தாக்குதலின் காரணமாக இருவர் கொல்லப்பட்டதாகவும், இருவர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

## ஜோர்டான் மறுப்பு

ஜோர்டானில் அரபுக் கொமாண்டோக்கள் மீது அரசாங்கப் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தினல் ஈராக் துருப்புகள் தலையிடுவார்கள் என்று ஈராக் எச்சரிக்கை விடுத்ததல்லவா? அவ்வாறு ஈராக் தலையிடும் பட்சத்தில் வல்லரசு நாடுகளின் உதவியை ஜோர்டான் கோரியிருப்பதாகக் கொமாண்டோக்கள் தெரிவித்துள்ளனர். குற்றச்சாட்டுகளை ஜோர்டான் மறுத்திருக்கின்றது.

அரபு லீக் தலைவர்கள் இன்று கெய்ரோவில் கூடி, மேற்காசிய நிலைமைகள் குறித்து ஆலோசனைகள் நடத்துகிருர்கள்.

வெளிநாடு பயணம்

## எம். ஜி. ஆர். அறிக்கை

சென்னை, செப். 5

'நான் வெளிநாடு செல்வது படப்பிடிப்புக்காகவேயொழிய அரசியல் மற்றும் தேசிய நோக்கங்களுக்காக வல்ல, எனவே என்மீது அன்பு கொண்டோர் அனைவரும் வந்து இதைப் பெரிய விழாவாக ஆக்கிவிடவேண்டாம்.

இவ்வாறு எம். ஜி. ஆர் தனது வெளிநாட்டுப் பயணத்தை முன்னிட்டு விடுத்த ஓர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர் வெளிநாடு புறப்படமுன் அவர் அவ்வறிக்கையில், தான் வெளிநாட்டில் தங்கியிருக்கும் காலங்களில் பேரறிஞர் அண்ணவின் பிறந்தநாள், மற்றும் மாநில சுயாட்சி மகாநாடுகள் வருவதாகவும் அதையொட்டி நடைபெறும் ஊர்வல பொதுக்கூட்டங்களில் மக்கள் எல்லோரும் கலந்துகொள்வதன் மூலம் மாற்ருர் எவ்வளவுதான் முயன்ருலும் மக்களிடமிருந்து தி. மு. கவை பிரிக்க முடியாது என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டுமெனவும்கேட்டிருக்கிருர்

......

## பூகம்ப காப்பு வீடுகள்

மாஸ்கோ, செப். 5

பூகம்ப காப்பு வீடுகளினது நிர்மாணத்திற்கான துருக்மேனிய நிலையத்தில் உள்ள விஞ்ஞானிகள், பல பரிசோதனைகளின் பின்னர் பூகம்பம் தாக்காத அதிபக்குவமான வீடுகள் 'சட்டக் கட்டு' ரக வீடுகளே என்ற முடிவுக்கு வந்துள்ளனர் ஜப்பானிலும், கலிபோர்னியாவிலும் பூகம்பம் நிகழும் தருணங்களில தப்பி நிற்கும் வீடுகள் யாவும் இந்த ரக வீடுகளேயாகும். இந்த ரக வீடுகள் மிகவும் சிக்கனமானவை. இவ்வீடுகளின் உற்பத்[தியு]ம், இணைப்பும் பூரணமாக எந்திர மயமாக்கப்பட்டுள்ளன.

## இனிமேல் இந்திய அரசுக்கு 5 கோடி மிச்சம்

புதுடில்லி, செப். 5

இனிமேல் இந்திய அரசுக்கு 5கோடி ரூபா மிச்சமாக கிடைக்கவிருக்கிறது.

அண்மையில் இந்தியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மன்னர் மானிய ஒழிப்புச் சட்டம் காரணமாக மிஞ்சவிருக்கும் இத்தொகை 278மன்னர்களுக்கு ஆண்டு தோறும் கொடுக்கப்பட்டு வந்தது.

எந்த ராஜா எவ்வளவு பெற்ருர் என்ற விபரம் வருமாறு:-

மைசூர் மகாராஜா: 26 லட்சம். ஐதராபாத் நிஜாம் மகாராஜா: ரூ 20 லட்சம், திருவாங்கூர் மகாராஜா: ரூ. 18 லட்சம் பாட்டியாலா மகாராஜா: ரூ. 17 லட்சம், பரோடா மகாராஜா: ரூ. 13 1/2 லட்சம், ஜெய்ப்பூர்மகாராஜா: ரூ. 10 லட்சம்,

இந்தமுடியில்லாமன்னர்களில் கதோடியா மன்னர் இந்திய அரசிடமிருந்து ரூபா 16 மட்டும் பெற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

......

## வேட்பாளரின் அதிசய வேண்டுகோள்

கோழிக்கோடு, செப் 5

'எனக்கு எவரும் வாக்குப் போட வேண்டாம். எனது மனைவி மக்கள், நண்பர்கள் எவருடைய வாக்கையும் நான்விரும்பவில்லை என்னுடைய வாக்கான ஒரேயொரு வாக்குக்கிடைத்தாலே நான் திருப்தியடைவேன்.'

இவ்வாறுகேரளஇடைத் தேர்தலில் போட்டியிடும் சுயேட்சை வேட்பாளருடைய அதிசய வேண்டுகோள் ஒன்று தெரிவிக்கிறது.

......

## கல்கத்தாவில் பெருவெள்ளம்

கல்கத்தா, செப். 5

கல்கத்தாவில் சில[நாட்க]ளாகப் பெய்தமழையினல் ஏற்பட்ட பெருவெள்ளத்தினல் 6 ஆயிரம் பேர் வீடிழந்துள்ளனர்.

வீதிகள் எங்கும் ...

# ஹரிஜனங்களுக்கு அதிக சலுகைகள் அளிக்கவேண்டும்

## புதுடில்லி லோகசபையில் அங்கத்தவர் வலியுறுத்தல்

புதுடில்லி, செப். 5

தீண்டாமை ஒழிப்புக்கு எதிராகச் செயல்படுவோர் மீது கடும்தண்டனை விதிக்கப்படும். இவர்களின் செயலைக் கண்காணிப்பதற்கு கண்காணிப்பாளர்கள் கமிட்டி நிறுவப்படவிருக்கிறது என இந்திய லோகசபையில் இந்திய சமூகநல மந்திரி திரு. ரெகுநாதரராவ் தெரிவித்தார்.

இந்தியாவில் அண்மைக் காலங்களில் செடியூல்ட் வகுப்பினருக்கும் பழங்குடி மக்களுக்கும் எதிராக நடைபெற்ற வன்முறைச் செயல்களின்பின் இதுபற்றிய விவாதம் லோகசபையில் நடைபெற்றது. இவ்விவாதத்திற்காக லோகசபை மேலும் ஒருநாள் தொடர்ந்து நடைபெற்றது.

இதற்கான மசோதாவை அடுத்த லோகசபைக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்க இருப்பதாகவும், கண்காணிப்பாளர் கமிட்டிகள் நிறுவுவதற்கு பல்வேறு ராஜ்யங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் சமூகநல அமைச்சர் தெரிவித்தார்.

செடியூல்ட் வகுப்பினருக்கும், பழங்குடி மக்களுக்கும் தொழில்பெறும் வாய்ப்பைக் கூட்டவேண்டுமென்றும் அவர்களுடைய உபகாரச் சம்பளம் ரூபா 500 ஆகக் கூட்டுவதற்குரிய அறிக்கை சமர்ப்பிக்கப்படுமெனவும் உள்நாட்டமைச்சின் ஸ்டேட் மந்திரி திரு. ராம் நிவாஸ் மிர்சா தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபின் இம்மசோதாவைப் புதிய முறையில் நவம்பரில் தொடங்கும் லோகசபைத் தொடரில் சமர்ப்பிப்பதாகவும் அவர் மேலும்தெரிவித்தார்.

செடியூலட்வகுப்பினருக்கு கூடிய வாய்ப்பை அரசாங்க நிர்வாகத்துறைகள் கொடுக்குமெனவும், தனியார் நிறுவனங்கள் அவர்களுக்கு கூடிய சலுகைகளை அளித்து வருவதாகவும் பிரதமர் இந்திரா காந்தி, எதிர்க்கட்சியினரின் கேள்விகளுக்கு விவாதத்துக்கிடையே குறுக்கிட்டுச் சொன்னர்.

இவ் விவாதத்தில் கலந்துகொண்ட எதிர்க் கட்சி அங்கத்தவர்கள் தீண்டாமை ஒழிப்புக்கு எதிரானவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனைகள் மேலும் அதிகமாக்கப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவைகளின் அதிக இடம் செடியூல்ட் வகுப்பாருக்கு ஒதுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

# வேலையில்லாத்திண்டாட்டம்பற்றி பிரிட்டனில் உலக மகாநாடு

## 300 நாடுகள் பங்குபற்றுகின்றன

லண்டன். செப். 4

இலங்கை போன்ற பின் தங்கிய நாடுகளுக்கு பெரும் தலையிடியைக் கொடுத்து வரும் வேலையில்லாப் பிரச்னை பற்றி பிரிட்டனில் இம்மாதம் உலக மாகாநாடு ஒன்று நடைபெற விருக்கிறது. 300 நாடுகளையும், பல சர்வதேச ஸ்தாபனங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் இம் மகாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

இம்மகாநாடு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பெருகிவரும் ஜனத்தொகை காரணமாகவும் கைத்தொழிற்துறை துரித வளர்ச்சியடையாதது காரணமாகவும் பின்தங்கிய நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. இச் சூழ்நிலையில் இந் நாடுகளில் வேலை வாய்ப்புக்களை எவ்வாறு உருவாக்குவதென்பது பற்றி இம் மகாநாட்டின் போது ஆராயப்படும்.

கிழக்கு இங்கிலாந்திலுள்ள கேம்பிரிஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த யேசு கல்லூரியில் இம்மாதம் 13ந் திகதிதொடக்கம் 24ந் திகதி வரை இம் மகாநாடு நடை...

...சாயம்மட்டுமன்றி விவசாய உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கான கைத்தொழில்களும் அவசியமாகிறது. ஆகவே விவசாயத்திற்கும் கைத்தொழில் வளர்ச்சிக்குமுள்ள தொடர்பு முக்கியமானதென பல சர்வதேச ஸ்தாபனங்கள் கருதுகின்றன.

# விபூதியும்குங்குமமும்: கொடி கோரிக்கைக்கு கருணுநிதியின் விளக்கம்

நாகர்கோவில் செப் 5

'இங்கு நீங்கள் எனக்கு அணிவித்த மாலை தேசியக் கொடியெனில் என்கையில் தந்த பூச்செண்டு தான் மாநிலக் கொடி. பெண்கள் காதில் அணியும் கம்மல் தேசியக் கொடியெனில் மூக்கிலணியும் மூக்குத்தி மாநிலக்கொடி. பக்தர்கள் நெற்றியில் பூசும்வீபூதி தேசியக் கொடியெனில் அதன்நடுவே துலங்கும் குங்குமம் தான் மாநிலக்கொடி.

இவ்வாறு வர்ணித்தார் தமிழக முதலமைச்சர் கருணுநிதி.

நாகர் கோவிலில் நடைபெற்றஒரு பொதுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் மக்களுக்கு நன்மை செய்வதற்காகவே தாங்கள் மாநில சுயாட்சி கேட்பதாகவும் இதற்கு காமராஜர் போன்ற தலைவர்கள் தங்கள் ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்றும் கூறினர்.

இக் கூட்டத்தில் தேர்தல் நிதியாக ரூபா 5000மும் தமிழக முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

# "ஒரு காலத்தில் சிங்கள மக்கள் தமிழில் பாண்டித்தியம் பெறுவர்

## இதற்காகவாவது தமிழர் சிங்களம் படிக்கவேண்டும்" என்கிருர் நல்லூர் எம். பி.

(நமது நிருபர் வி. சு. அருளானந்தன்)

திருநெல்வேலி, ஞாயிறு

'அறிவு வளர்ச்சிக்கா சிங்கள மொழியை நாம் கற்கிருேம் என்ற எண்ணத்துடன் சிங்களத்தைப் படிப்போமானல் தற்போது நிலவிவரும் மொழிப்பிரச்னை இருக்கவே மாட்டாது. அரசாங்க உத்தியோகம் பெறும் நோக்கத்துடன் மட்டும் சிங்களமொழியைக் கற்காமல் வேறுபாடின்றி சகலரும் சிங்களத்தைப் படிக்க வேண்டும்'



நல்லூர் எம்.பி. திரு சி. அருளம்பலம் இவ்வாறு நமது நிருபரிடம் கூறினர். சிங்களப் பகுதியில் சேவை ...

...ளதாக வெளியாகியிருந்த செய்திகண்டு தமிழ் மக்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும் சிங்கள மக்கள் கூட தமிழ் மொழியைக்கற்க முன்வரும் போது இந்நாட்டின் சிறுபான்மையினராகிய தமிழ்மக்கள் பெரும்பான்மையினரின் மொழியைக் கற்பதில் என்ன பிழை உண்டு? தற்போது தமிழ்மொழியை விரும்பிக் கற்பதற்கு முன்வந்துள்ள சிங்கள ஊழியர்கள் ஒரு காலத்தில்தமிழில் பாண்டித்தியம் பெற்று இந்நாட்டின்சகல பகுதிகளிலும் ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ரஷ்யா திரும்பிக் ...

...ளமொழியைக் கற்காமல் வேறுபாடின்றி சகலரும் சிங்களத்தைப் படிக்க வேண்டும்'

நல்லூர் எம்.பி. திரு சி. அருளம்பலம் இவ்வாறு நமது நிருபரிடம் கூறினர். தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பது சம்பந்தமாக திரு. அருளம்பலத்தின் கருத்தைக் கேட்ட போது அவர் இப்படிக் கூறினர்,

திரு அருளம்பலம்மேலும் கூறியதாவது:-

தமிழில் மட்டும் கல்வி கற்று அரசாங்கசேவையில் சேரும் ஒரு தமிழ் ஊழியர்



சிங்களப் பகுதியில் சேவை செய்ய நியமிக்கப்படும் போதுஅவர் பெரும் கஷ்டத்துக்குள்ளாகுவர் இதனை இல்லாமல்செய்ய சிங்களமொழி கற்றல் அவசியமில்லையா?

கொழும்பில் உள்ள புத்த மகாசபை அண்மையில் கூடி கொழும்புப்பகுதியில் உள்ள சிங்கள அரசாங்க ஊழியர்களுக்கு தமிழ், ஆங்கில மொழி கற்பிக்கமுன்வந்துள்

...றை உண்டு? தற்போது தமிழ்மொழியை விரும்பிக் கற்பதற்கு முன்வந்துள்ள சிங்கள ஊழியர்கள் ஒரு காலத்தில்தமிழில் பாண்டித்தியம் பெற்று இந்நாட்டின்சகல பகுதிகளிலும் தமிழிலும் சேவைசெய்யக் கூடியவர்களாய் வந்துவிடுவார்கள் அக்காலத்தில் தமிழ் ஊழியர்கள் சிங்களத்தில் சேவையாற்ற முடியாத நிலையில் அவதியுறவேண்டி ஏற்படச் செய்யும் எனவே தமிழ்மக்கள் சிங்களம்படிப்பதில் காலதாமதம் காட்டக் கூடாது.''

...ம், இணைப்பும் பூரணமாக எந்திர மயமாக்கப்பட்டுள்ளன.

— —

<u>கண்டெடுத்ததை</u>

## ரஷ்யா திருப்பிக் கொடுக்கிறது

மாஸ்கோ, செப் 5

விண்வெளிப் பயணத்தில் பயன்படுத்தப்படும் கவசப் பேழையொன்றை அத்லாண்டிக் சமுத்திரத்தில் கண்டெடுத்து அமெரிக்காவிடம் ஒப்படைக்கின்றது சோவியத் யூனியன்.

விண்வெளி ஆராய்ச்சிகளில் பயன்படுத்தப்படும் இந்தக் கவச உறையை அத்திலாண்டிக் சமுத்திரத்தில் சோவியத் மீனவர்கள் கண்டெடுத்தார்களாம்.

— —

கல்கத்தா, செப் 5

கல்கத்தாவில் சில...ங்களாகப் பெய்தமழையினல் ஏற்பட்ட பெருவெள்ளத்தினல் 6 ஆயிரம் பேர் வீடிழந்துள்ளனர்.

வீதிகள் எங்கும் ...ழங்காலுக்குமேற்பட்ட வெ...ளமாக விருக்கிறதென்றும் பிரயாண சாதனங்கள் இயங்க முடியாது ஸ்தம்பித்துள்ளனவென்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது

கணக்கெடுப்பின்படி 5 இலட்சத்துக்கு அதிகமானேர் அவதிக்குள்ளாயினர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

— —

...பது பற்றி இம் மகாநாட்டின்போது ஆராயப்படும்.

கிழக்கு இங்கிலாந்திலுள்ள கேம்பிரிஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த யேசு கல்லூரியில் இம்மாதம் 13ந் திகதிதொடக்கம் 24ந் திகதி வரை இம் மகாநாடு நடைபெறும். இதனை பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சு ஒழுங்கு செய்துள்ளது. ஆபிரிக்கா, ஆசியா, மத்தியகிழக்கு, வட அமெரிக்கா, லத்தீன், அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய பிராந்தியங்களைச் சேர்ந்த நாடுகள் இம் மகாநாட்டில் கலந்து கொள்கின்றன.

அரசாங்க அமைச்சர்கள், சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள், சர்வகலாசாலை நிபுணர்கள் மற்றும் சர்வதேச தொழில் ஸ்தாபனம், ஐ.நா. உணவு விவசாயஸ்தாபனம், பொருளாதார கூட்டுறவு அபிவிருத்தி ஸ்தாபனம். ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம், உலக வங்கி போன்ற சர்வதேச ஸ்தாபனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இம்மகாநாட்டில் பங்குபற்றுவார்கள். கேம்பிரிஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த சென். ஜோன்ஸ் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் ஆர். ஈ. ரொபின்சன் இம்மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.

கிராமிய அபிவிருத்தி திட்டங்கள் பற்றியும் அவற்றின் பொருளாதார பலாபலன்கள் பற்றியும் இம் மகாநாட்டில் விவாதிக்கப்படும். பல சர்வதேச நிறுவனங்கள் கிராமிய அபிவிருத்தியில் அக்கறை கொண்டு செயலாற்றி வருகின்றன. உதக நாடுகளின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு கிராமிய அபிவிருத்தி மூலம் தீர்வுகாண முடியுமென்பது இந்த ஸ்தாபனங்களின் நம்பிக்கை. 1968ம் ஆண்டு கேம்பிரிஜ் சர்வகலாசாலையில் இவ் விடயம் பற்றியே ஒரு சர்வதேச கருத்தரங்கொன்று நடைபெற்றது. சாம்ராஜ்ய கல்வி மாநாட்டின் போதும் கிராமிய விவசாய அபிவிருத்தி பற்றியே ஆராயப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

பின்தங்கிய நாடுகளைப் பொறுத்தவரை மக்களுக்கு நிலமே பிரதான இயற்கை வளமாக இருந்துவருகிறது. இந் நாடுகளின் ஜனத்தொகையில் 90 விகிதமானேரின் வாழ்க்கைத் தொழிலாக விளங்குவது விவசாயமாகும். இந் நாடுகளின் தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு விவ

...றியில் பூசும்விபூதி தேசியக் கொடியெனில் அதன்நடுவே துலங்கும் குங்குமம் தான் மாநிலக்கொடி.

இவ்வாறு வர்ணித்தார் தமிழக முதலமைச்சர்

...மென்றும் கூறினர்.

இக் கூட்டத்தில் தேர்தல் நிதியாக ரூபா 5000மும் தமிழக முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

---

# முதலாளித்துவத்தில் சோஷலிஸம் ஏற்படாது

## பெண்கள் தலைவி கருத்து

நாவலப்பிட்டி, சனி

மக்கள் வெற்றியைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த நாட்டில் சோஷலிஸத்தை முன்னேற்ற வேண்டுமானல், இங்குள்ள உள்நாட்டு வெளிநாட்டு முதலாளித்துவ சுரண்டல்களை ஒழித்தாக வேண்டும். முதலாளித்துவ அமைப்பை வைத்துக் கொண்டு சோஷலிஸத்தைக் கொண்டுவர முடியாது இவ்வாறு இலங்கா காந்தா பெரமுனை உபதலைவி திருமதி நந்தா சில்வா கூறினர்.

நாவலப்பிட்டி கொம்யூனிஸ்ட்கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற பெண்கள் கூட்டமொன்றில் அவர் உரைநிகழ்த்தினர்.

முந்திய அரசாங்கம்திறைசேரியைக் காலியாக்கிவிட்டதாக சாட்டுச் சொல்லிக் கொண்டு இந்த அரசாங்கமும் பேசாமல் இருந்துவிடுமானல் அந்த அரசாங்கத்துக்கு ஏற்பட்ட முடிவுதான் இதற்கும் ஏற்படும். ...ட்சியை நாட்டின் அதிகாரிகளின் கருத்துக்கு ஏற்ருற்போல் செய்து கொண்டு போனல் பிரச்னைகளை ஒரு போதும் தீர்த்து வைக்கவும் இயலாது என்று திருமதி நந்தா சில்வா குறிப்பிட்டார்.

... ...

<u>அடுத்த ஆண்டுக்குள்</u>

## சுழிபுரத்துக்கு மின்சாரம்

சுழிபுரம், சனி

சுழிபுரம் கிராமசபை மின்சார வேலைகள் யாவும் 1971-ம் ஆண்டுக்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டும் என்ற அரசின் ஒப்பந்தம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமியால் கைச்சாத்திடப்பட்டுள்ளது மின்சார இணைப்பு வேலைகள் யாவற்றையும் வலிகாமம் மேற்கு தொழிலாளர் சங்கம் பொறுப்பேற்றுள்ளது. வருடம் ஒன்றுக்கு ரூபா மூவாயிரம் மின்சாரத்தினல் லாபம் கிடைக்கும் என கிராமசபை எதிர்பார்க்கிறது.

......

## நீண்டநாள் குறை நீங்கியது

யாழ்ப்பாணம், ஞாயிறு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நீண்ட நாட்களாகவிஞ்ஞானகூடம் அடைபட்டுக்கிடந்தது புதியஅதிபர் க. தியாகராசா வந்த பின்னர் விஞ்ஞானகூடம் திறக்கப்பட்டு மாணவர்களின் நீண்ட நாட்குறைநிறைவேறி. பாடங்கள் அத்தனையும் அமைதியாகவும் அக்கறையுடனும் நடாத்தப் பட்டுவருகின்றன.

விஞ்ஞானப் பட்டதாரியாகவும், பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றவரும், குறிப்பாக பெற்ருர் ஆசிரியர்களின் ஆவலை நிறைவேற்றவேண்டி நியமனம் பெற்ற, மேற்படி அதிபர் கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பலதிட்டங்களைத் தயாரித்து சகலரின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றும் தொண்டில் இறங்கியுள்ளார்.

கூட்டப்படாதிருந்த பெற்ருர்-ஆசிரியர் சங்கம் புத்துயிர் பெற்று மேற்படி கல்லூரியின் ஆக்கத்திற்கு ஆவன செய்யக் காத்திருக்கின்றது

கல்லூரியின் அணிகலனுக விளங்கிய சாரணர் இயக்கம் தடையுத்தரவின் பெயரில் தொழிற்படாதிருந்தது அதுவும் மேற்படி அதிபரின் ஊக்கத்தினல் புத்துயிர் பெற்று இயங்க ஆரம்பித்துள்ளது. கல்லூரியின் வளர்ச்சியைஎதிர்பார்க்கும் பெற்ருரும், ஆசிரியரும், மாணவரும் இதயமொன்றித் தம் துறைகளிலீடுபட்டு செவ்வனே குறை நீங்கி நிறைவு பெற்றுள்ளனர்.

## இன்று ஆய்வேடு வாசித்தல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் யாழ்ப்பாணம் மெய்கண்டார் கழக ஆதரவில் இன்று மாலை 4-30 மணிக்கு திரு மு ஞானப்பிரகாசம் ஆய்வேடு வாசிப்பார்.

## சோவியத் மேல்சபைத் தலைவர்

மாஸ்கோ, செப். 5

உலகின் முதல் ஜனதிபதியான பெருமையைப்பெற்ற யத்கார் நஸ்றுத்தினேவா சோவியத் யூனியன் பாராளு மன்றத்தின்மேல் சபையாகிய தேசிய இனங்களின் சோவியத்தின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சோவியத் நாட்டின் மத்திய ஆசிய முஸ்லிம் குடியரசுகளில்ஒன்ருன உஸ்பெகிஸ்தானின் ஜனதிபதியாக முன்னர் கடமையாற்றிய நஸ்றுத்தினேவா அம்மையார், உஸ்பெகிஸ்தானின் நிர்மாணி, கைத்தொழில் அமைச்சராகவும் உதவிப் பிரதமராகவும் சில காலம் பதவி வகித்தார். இவர் ஒரு ரயில்வே என்ஜினியராவார்.

இன்று உஸ்பெகிஸ், தான் பாராளுமன்றத்தில் 22 மாதர்களும், சோவியத் பாராளு மன்றத்தில் 141 மாதர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

......

## சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஸ்ரீ லங்கா சுகாதாரப் பகுதி கனிஷ்ட சேவை சங்க நடப்பு வருட நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: ஆர் பிச்சன், உபதலைவர்: பி ஜெரத்தினம், காரியதரிசி பி ஜி ஞானப்பிரகாசம், உபகாரியதரிசி: எஸ் வி சுப்பிரமணியம், பொருளாளர்: கே எம் சங்கரன், 9 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## பூநகரி பௌத்த தமிழ்ப் பாடசாலை

பூநகரி, சனி

வடபகுதியில் உள்ளஐந்து தமிழ் பௌத்த பாடசாலைகளில் நாலு பௌத்த பாடசாலைகளைக் கையேற்றுள்ள அரசாங்கம் பூநகரியிலுள்ள தமிழ் பௌத்த பாடசாலையைக் கையேற்காதுவிட்டது பற்றி இப்பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் அதிருப்தியடைந்துள்ளனர். இப்பாடசாலையைத்தொடர்ந்து நடத்துவதற்குப் போதிய பணவசதி இல்லாதிருப்பதாக ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

......

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

இசைவிழா மாலை 5-30 மணிக்கு இசைக்கல்லூரி மாணவிகளின் பாட்டுடன் ஆரம்பமாகிறது. இன்றைய நிகழ்ச்சிகளுக்கு மாநில கல்வியதிகாரி திரு வி சங்கரலிங்கம் தலைமைவகிப்பார்.

செல்வி சிவபாக்கியம்செல்லையா, திரு வ பரமசாமி, செல்வி ஜெகதாம்பிகை பரமநாதன் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரிகள் இன்று இடம்பெறும்.

## மே. ஜேர்மனியில் சுகார்டோ

பேர்லின், செப். 5

இந்தோனேஷிய ஜனதிபதி சுகார்டோ மேற்கு ஜேர்மனிக்கு விஜயம் செய்துள்ளார். இவரது பாதுகாப்பை முன்னிட்டு, முன்பு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப் பட்டது. ஜனதிபதி சுகார்டோவின் வருகையை எதிர்த்து சிலர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

—

## ''பத்திரிகைச் சுதந்திரத்தை பாதுகாக்கவேண்டும்''

கோட்டை, சனி

'அரசியல்வாதிகள்சிலரும் சில பத்திரிகைகளும் பத்திரிகைகள் தேசியமயமாக்கப்பட வேண்டும் எனக் கோருகின்றனர் ஆனல் ஒரு ஜனநாயக நாட்டில் பத்திரிகைகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்டதாக விருக்கக்கூடாது சுதந்திரமுடையதாக விருக்க வேண்டும்'

தங்காலைப்பட்டின சபையில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

பத்திரிகைச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற மேற்படி தீர்மானத்தை தங்காலை பட்டின சபைத் தலைவர் திரு. கலப்பத்தி கொண்டுவந்து நிறைவேற்றினர் தீர்மானத்தை இவர் பிரேரித்துப் பேசுகையில் தெரிவித்ததாவது. ''பலர் ஏரிக்கரைப் பத்திரிகை தேசியமயமாக்கப் படவேண்டும் எனக் கூறுகின்றனர் கடந்த அரை நூற்றாண்டுகாலமாக ஏரிக்கரைப் பத்திரிகைகள் நாட்டுக்கு ஆற்றிவரும் சேவையைஇவர்கள் மறந்துவிட்டனர் உத்தேச அரசியல் திட்டத்தில் பத்திரிகைச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்.''

<u>இந்திய லோக சபையில்</u>

# தீக்குளிக்க முயன்ற சாமியார் கைது

புதுடில்லி, செப். 5

இந்திய மக்கள் பிரதிநிதிகள் சபையான லோகசபையில் தீக்குளிக்க முயன்ற சாமியார் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த ஒரு கோவிலில் பணியாற்றும் யோகேன் வரானந்தகிரிஎன்னும் இச்சாமியார் அக்கோவிலை அந்த மாநில அரசாங்கம் இடிக்கவேண்டுமென அறிக்கை 'விட்டிருந்ததை பன்முறை ஆட்சேபித்தும் பலன் கிடைக்காததாலேயே இம்முயற்சியை மேற்கொண்டாரெனக் கூறப்படுகிறது.

இந்தியப் பாராளுமன்றத்தில் நுழைந்து பார்வையாளர் கலரியில் உட்கார்ந்திருந்த இவர் பாராளுமன்றக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுது திடீரென எழுந்து தீக்குச்சியைக் கொளுத்தித் தன் சட்டையில் பிடிக்கவே அது பலமாக எரியஆரம்பித்தது இதனைக்கண்ட பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவர் விரைந்து வந்து நெருப்பை அணைத்தபோது அவர்கையிலும் காயம் ஏற்பட்டது.

இறுதியில் பொலிசார் சாமியாரைக் கைது செய்ததுடன் மேற்கொண்டு இது சம்பந்தமாக விசாரணையும் செய்து வருகின்றனர்.

## சீனவின் அன்பளிப்பு

கோட்டை, சனி

இலங்கைக்குசீன 2 கோடியார் ஜவுளிவகைகளை வழங்கியுள்ளது.

இலங்கை அரசாங்கம் நாட்டின் தற்போதைய பொருளாதாரத்தை விளக்கிச்சோஷலிச நாடுகளிடம் உதவி கோரியிருந்தது இந்தக் கோரிக்கையை ஏற்றே மக்கள் சீனக்குடியரசு இலங்கைக்கு மேற்படி உதவியைச் செய்துள்ளது.

— —

## சுபசிங்கா பயணம் ரத்து

கோட்டை, சனி

கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா இன்று ஜப்பான் செல்லவிருந்த பயணம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

இவருக்குப் பதிலாக ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. எச். தென்னக்கூன் இலங்கைப் பிரதிநிதியாக மகாநாட்டில் கலந்து கொள்வார்.

— —

## தீர்மானம் தோல்வி

மட்டுவில், சனி

''தமிழ் மாணவர்கள் சிங்களம் படிப்பது சம்பந்தமாகத் தீர்மானம் எடுக்கவேண்டியது மாணவர்களின் பெற்ருேர்கள்தான் 1956-ம் ஆண்டு முதல் மொழிப் பிரச்னை அரசியல் பிரச்னையாக இருந்துவருகின்றது. இப்பிரச்னைக்கு அரசியல் ரீதியில் தான் முடிவுகாணப்பட வேண்டும்''

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் உள்ளபாடசாலைகளில் சிங்களம் படிப்பிப்பதற்கு சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று கல்வி அமைச்சரையும், பிரதமரையும் கோர வேண்டுமென்று நகரசபையின் 11-ம் வட்டார உறுப்பினரால் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீது ஒன்பதாம் வட்டார உறுப்பினர் கே. மயில்வாகனம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

''தமிழ் மாணவர்கள் சிங்களம் படிக்கவேண்டுமாயின் சிங்களமாணவர்களும் தமிழ் படிக்கவேண்டும். சிங்கள மாணவர்களுக்கு தமிழ் இரண்டாவது கட்டாயபாடமாகவும். தமிழ் மாணவர்களுக்கு சிங்களம் இரண்டாவது கட்டாயபாடமாகவும் அமையவேண்டுமென எட்டாம் வட்டார உறுப்பினர் எஸ், எஸ். பாலசுப்பிரமணியம் கூறினர்.

பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஒரு வாக்கால் தோல்வியடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

விவசாயி அல்லது கைத்தொழிலாளியின் வாழ்க்கை போன்ற உழைப்புள்ள வாழ்க்கையே மனிதர் ஒவ்வொருவரும் கைக்கொள்ளவேண்டிய இன்பகரமான வாழ்க்கையாகும். அதுவே தான் மகிழ்ச்சியையும் சாந்தியையும் அளிக்கும்.

—காந்தியடிகள்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams "EELANADU" Jaffna:
Post Box 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணிமாதம் 21-ந் திகதி (6-9-70)


## இரண்டு கொத்து அரிசி

தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சிம்மாசனப் பிரசங்கத்திலும் வாக்குறுதியளித்திருந்தபடி இரண்டு கொத்து அரிசி வழங்குவதென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு ஆர் டி பண்டாரநாயகா மறைந்த தினமான இம்மாதம் 26-ந் திகதி முதல் பங்கீட்டரிசிப் புத்தகத்துக்கு இரண்டு கொத்து அரிசி வழங்கப்படவிருக்கிறது. இப்போதுள்ளது போல் முதல் கொத்து இனமாக வழங்கப்படும். இரண்டாவது கொத்து விலைக்கு வாங்கப்படவேண்டும். இரண்டாவது கொத்து அரிசியின் விலை எழுபத்தைந்து சதம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

வெட்டப்பட்ட ஒரு கொத்தும் சேர்த்து மீண்டும் இரண்டு கொத்து அரிசி வழங்குவோம் என்று கூட்டணியினரின் தேர்தல் விஞ்ஞாபனமும் கூட்டணி அரசின் முதலாவது சிம்மாசனப் பிரசங்கமும் உறுதியளித்திருந்தன. இரண்டு கொத்து அரிசியும் இலவசமாகக் கொடுக்கப்படுமென்று உறுதியளிக்கப்படவில்லை.

ஒரு கொத்து அரிசி வெட்டப்பட்டு அந்தக் கொத்தும் இலவசமாகக் கொடுக்கப்படுவதற்கு முன்னர் இரண்டு கொத்து அரிசி விலைக்குத்தான் விற்கப்பட்டது.

இந்தவகையில் இரண்டு கொத்து அரிசிக்கும் விலை நிர்ணயிக்கப்படாமல் ஒரு கொத்து அரிசியை இலவசமாகவும் இரண்டாவது கொத்து அரிசியை எழுபத்தைந்து சதத்திற்கும் கொடுப்பது என அரசாங்கம் தீர்மானித்திருப்பதில் தவறில்லை.

ஆனால் இரண்டாவது கொத்து அரிசியை எழுபத்தைந்து சதம் கொடுத்து வாங்கினால்தான் முதலாவது கொத்து அரிசி கொடுக்கப்படுமா? இலவசமாக வழங்கப்படும் முதல் கொத்து அரிசியை மட்டும் வாங்கிக்கொண்டு இரண்டாவது கொத்து அரிசியை வாங்காமல் விடமுடியுமா? இரண்டு கொத்து அரிசியும் வாங்கத்தான் வேண்டுமென்றால் ஒரு கொத்து அரிசி இலவசம் என்று சொல்ல முடியாது ஒரு கொத்து அரிசி முப்பத்தேழரைச் சதம் முடியும்

ஒரு கொத்து அரிசி ஒன்றேகால், ஒன்றரை ரூபாய் கொடுத்துத்தான் தான் வெளியில் வாங்க முடியும். இதனுடன் ஒப்பிடுகையில் ஒரு கொத்து அரிசி முப்பத்தேழரைச் சதம் என்ற வகையில் இரண்டு கொத்து அரிசிக்கும் எழுபத்தைந்து சதம் கொடுத்து வாங்கினாலும் சரி ஒரு கொத்து அரிசியை இலவசம் என்று சொல்லி இரண்டாவது கொத்து அரிசியை எழுபத்தைந்து சதம் கொடுத்து வாங்கினாலும் அவ்வளவு பாதிக்கமாட்டாதுதான்

என்றாலும் ஓர் இருத்தல் மாவையோ ஓர் இருத்தல் மரவள்ளிக் கிழங்கையோ வாங்கி வாழ்க்கையை சமாளிக்க முடியாத கஷ்டநிலையில் பல குடும்பங்களிருக்கின்றன. இப்போது இலவசமாகக் கிடைக்கும் ஒரு கொத்து அரிசியை மட்டும் நம்பி இந்தக் குடும்பங்கள் வாழ்கின்றன. இரண்டு கொத்து அரிசியையும் வாங்கித்தான் தீரவேண்டுமென்றால் இந்தக் குடும்பங்கள் கஷ்டமடைய நேரும். இலவசமாக வழங்கப்படும் ஒரு கொத்து அரிசியை மட்டும் வாங்கலாமென்றால் இரண்டாவது கொத்து அரிசி கள்ளச்சந்தைக்குள் நுழைய வழி பிறக்கும்.

சிக்கலான விஷயம்தான் ஆனாலும் இவை பற்றி அரசாங்கம் ஆராய்ந்து நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம்.

# நாட்டின் வளர்ச்சியும் வளமும் அரசியல் அமைப்பில்தானுள்ளது

**செ. சுவாமிநாதன் பி. ஏ.**

கடந்த நாலரை நூற்றுண்டு காலமாக [1948-க்கு முன்] எமது அபிலாசைகளெல்லாம் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டன படையெடுப்பாளர்களுக்கும் சூழ்ச்சிக்காரருக்கும் உகந்த விளைநிலனாக இருந்துவிடும் அபாக்கிய நிலை ஈழமணிநாட்டுக்கு இருந்து வந்தது பேரரசுப் பூட்கை. ஆக்கிரமிப்புக் கெடுபிடி என்பவற்றுக்கு பாரதம் கொடுத்த பலத்த அடியோடு பாரதமும் பக்கத்திலிருந்த ஈழமும் சுதந்திரம் பெற்றுக்கொண்டன. இலங்காவைப் பொறுத்து சுதந்திரம் என்ற சொற்பிரயோகம் அதற்குரித்தான நிறைவான கருத்தைப் பெருது அதோடு ஒட்டிய அரைகுறை உருவத்தையே இதுவரை பெற்றிருந்தது.

சுதந்திரம் அரைகுறைப் பிரசவமாக இருக்கும் நிலையை மாற்றி முழுமையானதாக மலர வைக்க வேண்டுமென்ற தன்மானவாதிகளின் பெருமுயற்சிக்கும் பேரார்வத்திற்கும் கிடைத்த வெற்றி மக்கள் அரசாங்கம் என்ற உருவத்தில் ஏற்றிவைக்கப்பட்டது திரு. எஸ். டபிள்யூ ஆர் டி. பண்டாரநாயக்காவின் ஆசைக்கனவு யாப்புமாற்ற உருவத்தில் இன்று நனவாகிக் கொண்டிருக்கின்றது.

இதுவரை காலமும் எமக்கென ஓர் அரசியல் யாப்பு இருந்து வந்ததெ'பதை நினைக்கும்போது ஒருபுறத்தில் வேதனையும் மறுபுறத்தில் வேக்காடும் எழுவதைத் தடுக்கமுடியவில்லை' இருந்து வரும் யாப்பு சமுதாயத்தின் சௌஜன்ய உறவை வளர்க்கத் தவறிவிட்டது. ஏற்படக்கூடிய அபிவிருத்திகளை அடியோடு அகற்றிவிட்டது. இருந்துவரும் யாப்பினால் திருப்தியுற்றோர் சிலர். அதிருப்தி கொண்டவர்கள் அனேகம் அனேகம். இதுவரை காலமும் இருந்து வரும் அரசியல் யாப்பாவது தகுதியானதென்ற காரணத்தைக் கொண்டே மாற்ற முயற்சிகளில் யாரும் கைவைக்கவில்லையென்று எவரும் தவருக நினைத்துவிடக் கூடாது. இருந்து வரும் யாப்பு தன்மீது ஏற்படக்கூடிய மாற்றங்களைத் தடுத்து வைக்கும் விதத்தில் நெகிழாததாகவிருப்பதே காரணமாகும்பிரித்தானியாவில் இருப்பதுபோலன்றி, இங்கே சாதாரண சட்ட நிறைவேற்றல் ஒழுங்குக்கும் அரசியற் திட்ட ஒழுங்குக்கும் வேறுபாடுகள் காண்பிக்கப்பட்டுள்ளன.

ஆட்சிமன்றம் அரசியல் நிருணயசபையாகவும் மாற்

கொள்கைவேறுபாடுகளையே இறுகக் கட்டிக்கொண்டு தூரத்தில் நில்லாமல் அனைவரும் நல்லெண்ணத்துடன் அண்மித்துச் சமரசமான முறைகளில் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணக் கங்கணம் கட்டி நிற்பதுபோன்ற நிலையை எல்லா விடயங்களிலும் காணவேண்டுமென்றுதான் மக்கள் ஆசைப்படுகிறார்கள். அங்கேதான் அபிவிருத்தியின் இரகசியம் தங்கியுள்ளதென்பதைச் சுட்டிக் காட்டுகிறோம்.

அனைவரும் இன்று எதனை எதிர்பார்க்கிறார்கள்? சோஷலிச ஜனநாயக சுதந்திரக் குடியரசு தமக்கு எப்பொழுது கிடைக்குமென்றுதான் எல்லோரும் எதிர்பார்த்திருக்கிறார்கள். நாம் ஏற்கனவே பிரித்தானியசாம்ராஜ்யப் பிடியிலிருந்து நீங்கிவிட்டோம் இருந்தாலும் சாம்ராஜ்ய வாசனை இன்னும் நீங்கவில்லை. சாம்ராஜ்ய ஒட்டுண்ணிகள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவற்றிற்கு முடிவுகாலம் குடியரசின் உதய காலத்தோடு அமையும். குடியரசு என்பது எமது வெளிநாட்டு இறைமையைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளும் முறையாகும், எமக்கென ஒரு தலைவர் எமது நாடல்லாத நாட்டுப் பிரசையாக இருக்க முடியாதென்பதேயாகும். நாம் எமது நாட்டைக் குடியரசாகப் பிரகடனம் செய்து கொள்வதால் உடனடியாக ஏற்படக்கூடிய விளைவுகள் யாவை? மகாராணியாருக்கு இலங்கைமீது பெயரளவு உரிமைகள் தாமும் குடியரசாக இலங்கை மாறிய பின் செல்லுபடியாகாது. மாட்சிமைதங்கிய மகாராணியார் சேவை என்ற முத்திரைப்பதம் தனதுசக்தியை இழந்துவிடும். பிறிவிகவுன்சில் (கோமறைக்கழக) மேல்முறையீட்டு விண்ணப்ப முறை காலங்கடந்ததாகிவிடும். மகாராணியின் தூதுவராக கவர்னர் ஜெனரல் இருக்கும் நிலைமை இல்லாமலாகிவிடும் அதற்கு பதிலாக நாட்டு [illegible]களால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி ஒருவர் அனைத்துக்கும் அதிகமான பதவியை[illegible]கிப்பார்.

நாயக்கா எடுத்துக் கூறியுள்ளார். தேயிலையை அதிகமாக ஏற்றுமதி செய்யும் இந்தியா, இலங்கை ஆகிய இரண்டினுள் ஒன்று அங்கம் வகிக்க மற்றது அங்கம் வகிக்காவிட்டால் ஏற்படக்கூடிய சந்தைச் சலுகை குறைவாகி எமது அன்னிய செலாவணிக்குப் பேரிடி விழலாமென்பதே எதிர்க்கட்சித் தலைவரின் அறிவுறுத்தலாகும். பிரித்தானியா, ஐரோப்பிய பொதுச் சந்தையில் சேர அனுமதி பெறுமா பெருதா என்பதைப் பொறுத்தே அவரின் வாதத்தின் பலவீனமும் பலமும் தங்கியுள்ளன.

புதிய யாப்பு எவ்வாறு அமையவேண்டுமென்பதையிட்டு அபிப்பிராயகூறப் பகிரங்கமான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. யாப்பு அமைப்பாளர் எல்லா நாட்டு அரசியலமைப்புக்களையும் எழுத்தெண்ணிப் பிடித்து எல்லா நாட்டு அரசியலமைப்புகளிலுமுள்ள சிறந்த அம்சங்களைக் களைந்தெடுத்து அவற்றைச் சேர்ந்த ஓர் அமைப்பை உருவாக்கவேண்டும். இந்த வகையில் இலங்கை பல்கலைக்கழக அரசியற்றுறைப் பேராசிரியர் போன்றவர்களின் ஆலோசனைகளுக்கும் கணிசமான இடம் அளிக்கப்படல் வேண்டும். சிறுபான்மை பெரும்பான்மை என்ற பேதத்தை அடியோடுநீக்கிஇலங்கையர் என்ற தேசிய நல்லெண்ணத்தை உருவாக்கும் வகையில் யாப்பு அனைவரையும் சமாதானப்படுத்தி சமரசம் செய்வதாயிருக்க வேண்டும். இனவாதத்தைக் கிளறிவிடும் கட்சிகள் உருவாவதற்கு திட்டமூலம் தடைவிதிக்கப்படல் வேண்டும் இரண்டாவது சபையின் அவசியம் பற்றிய கருத்துக்கள் அரசியற் சாத்திரகாரர்களின் ஆய்வின் மூலமும், நாடுகளின் அனுபவத்தின் மூலமும் பலவீனமடைந்துள்ளன. இச்சபையின் நோக்கம் இதுவரையில் ஈடேறுதலால் பெரும் பணத்தொகையை விழுங்கிக்கொண்டிருக்கும் இச்சபையை தொடர்ந்தும்

கோவையோ ஐ. நா. அடிப்படை உரிமைச் சாசனக் கோவையோ சேர்க்கப்படவேண்டும் நீக்கப்படவிருக்கும் பிறவிகவுன்சில் விண்ணப்பத்திற்குப் பதிலாக இலங்கையில் விண்ணப்பிக்கக்கூடிய விதத்தில் அமெரிக்காவிலுள்ளது போன்ற நிர்வாகத் தலையீடற்ற அதிகாரமிக்க உச்ச நீதிமன்றம் தாபிக்கப்படவேண்டும். சுவிற்சலாந்திலுள்ளது போன்ற முறைகளைப் பின்பற்றி மொழிவாரியாக ஒரு தீர்வினைக் காணுவதோடு, அங்குள்ள நேரடி ஜனநாயக முறைகள் அங்குள்ளதுபோன்று செறிவாக இல்லாவிட்டாலும் மேலெழுந்தவாரியாகவாவது அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

அனைத்தையும் ஆலோசித்து. யாப்புச்சட்ட உருவம் பெற்றதும் மக்களது அபிப்பிராயத்துக்கு அதுகையளிக்கப்படவேண்டும் என்று பலர் அங்கலாய்கிறார்கள். மக்களுக்காக மக்களால் உருவாக்கப்பட்ட மக்கள் அரசாங்கம் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்குமெனப் பூரணமாக நம்புகின்றோம். இலங்கையின், எதிர்காலத்தின் வளமும், வளர்ச்சியும் வளர்ந்துகொண்டிருக்கும் யாப்பின் அமைப்பிலேதான் தங்கியுள்ளதென்பதை அரசியலறிஞர்கள் சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கின்றனர். இந்த யாப்பு காலத்தின் தேவைக்கேற்ற மாற்றங்களையும் இலகுவில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இறுக்கமற்ற முறையில் அமையவேண்டும். யாப்பு நெகிழாத பட்சத்தில் அதன் ஆயுட்காலம் மிகக் குறைவென்பதை அரசியல் அனுபவசாலிகள் குறித்து வந்துள்ளனர். எல்லாமே அமையவிருக்கும் யாப்பிலே தங்கியுள்ளதால் எல்லோருமே அந்த விடயத்தில் கவனமாகவிருக்கவேண்டும்.

## 600 பட்டதாரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகுதியினர் மிக விரைவில் தெரிவு செய்யப்பட்டு அடுத்தமாதம் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகும்.

இவர்கள் தொகுதிவாரியாகவும் பிரதேசவாரியாகவும் தெரிவு செய்யப்படுவர், பொருளாதாரம் வர்த்தக நிர்வாகம் இவைபோன்ற பாடங்களில் தேறியவர்களுக்கு இடம் அளிக்கப்படும். புதிதாகச் சேர்க்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையினருக்கு அளிக்கப்படும் சம்பளம் வருடத்திற்கு ரூபா 5400, இப்பதவியில் நியமிக்கப்படுபவர்களுக்கு கொடுக்கப்படும். முதலில் 60-ல் இருந்து 70 பட்டதாரிகள் தெரிவு செய்யப்படுவர்.

…… ……

## இன்று கவிதைநாடகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்று வரும் 'நிழல்' நாடக விழாவில் இன்று மாலை கவிஞர் …

## சித்திபெற்ற மாணவர்

பேராதனை, சனி

கடந்த ஆவணி மாதம், இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனையில் நடைபெற்ற சிறப்பியல் விஞ்ஞானப் பரீட்சையில் சித்தியடைந்த தமிழ் மாணவர்கள் விபரம் வருமாறு:

**இரசாயனவியல்:** கே சிவபாலன், வி புவிராஜசிங்கம், எஸ் கேசவமூர்த்தி, ஏ சிறீபதி, ஐ செல்வத்துரை.

**தாவரவியல்:** கே ஜெயசீலன், எஸ் ஆர் ராஜபாலன், செல்வி இ நடராஜா, செல்வி தி பிரேமளா, ஏ. சிலபாலன், செல்வி கு குணநாயகம், செல்வி ப சின்னையா.

**விலங்கியல்!** செல்வி ம. மகேந்திரராஜா, செல்வி ஜெ குசைப்பிள்ளை.

## குளிர்த்தி அபிஷேகம்

அம்பன், சனி

தும்பளை கணக்கிலாவத்தை பிள்ளையார்கோவில் குளிர்த்தி அபிஷேகம்சென்ற வாரம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஈழத்துச் சித்தர் திருநாவுக்கரசு சுவாமிகள் இங்கு பல அற்புதங்களை நிகழ்த்திக் காண்பித்தார்.

# 'முடிக்குரிய காணிகளை பகிர்ந்து அளிக்கவும்'

## உதவி மந்திரிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

உரும்பராயிலுள்ள முடிக்குரிய காணிகளை அவ்வூரில் வசிக்கும் ஏழைக்கமக்காரர்களுக்கு பகிர்ந்து வழங்கவும்.

உரும்பராய் நவசக்தி சனசமூக நிலையத்தின் சார்பில் நேற்றுஉதவிக்காணி அமைச்சர் திரு. எச். எம். நவரத்தினவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது பயிரிடப்படாது இருக்கும் தனியார் காணிகளை சுவீகரித்து காணியற்றவர்களுக்கு பயிர்செய்வதற்காக கொடுக்கவும் இதனால் உற்பத்தியை பெருக்கவும் முடியும்.

## அயூப்கான் அரசியலில் இறங்க மாட்டார்

ராவல்பிண்டி, செப். 5

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பீல்ட் மார்ஷல் அயூப்கான் மீண்டும் அரசியலில் இறங்கமாட்டார். இதை அவரே இன்று பத்திரிகை நிருபர்களிடம் கூறினார், முன்னரும் ஒரு தடவை இவ்வாறு அவர் கூறியிருக்கிறார்.

**நாடக விமர்சனம்**

## "அவளைக் கொன்றவள் நீ"

''நிழல்' நாடக நிறுவனம் வீரசிங்கம் மண்டபத்தில் … பொலிஸ் இன்ஸ்பெக்டராக நடித்த …

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருப்பநில் தவறில்லை.

ஆனால் இரண்டாவது கொத்து அரிசியை எழுபத்தைந்து சதம் கொடுத்து வாங்கினால்தான் முதலாவது கொத்து அரிசி கொடுக்கப்படுமா? இலவசமாக வழங் கள்ளச்சந்தைக்குள் நுழைய வழி பிறக்கும்.

சிக்கலான விஷயம்தான் ஆனாலும் இவை பற்றி அ. சாங்கம் ஆராய்ந்து நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம்.

## புதிய தொல்லை

அரசாங்க அலுவலகங்கள் பலவற்றில் பலர் நாட்சம்பள அடிப்படையில் தற்காலிக ஊழியர்களாகப் பணியாற்றிவருகிறார்கள். இவர்களில்பலரும் வருடக்கணக்கில் தற்காலிக ஊழியராகவே இருக்கின்றனர். இவர்களுடைய வேலைக்கு இடம் காலியாகும்போது இந்தத் தற்காலிக ஊழியர் தெரிவு செய்யப்பட்டு நிரந்தர ஊழியராக்கப்படுவதுண்டு. இவர்களையும் எழுத்துப்பரீட்சை, நேர்முகப் பரீட்சைவைத்துத் தான் தெரிவு செய்கிறார்கள். இதில் தவறில்லை. ஆனால் இதுவரை நடைமுறையிலிருந்து வந்த இந்த வழக்கத்தில் இப்போது மாறுதல்செய்யப்பட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களக் களஞ்சியங்களில் காவல்வேலை செய்யும் பன்னிரண்டு இளைஞர்கள் கடந்த இரண்டு வருடங்களாக நாட்சம்பள அடிப்படையில் தற்காலிக ஊழியராகப்பணி புரிந்து வந்திருக்கின்றனர். இவர்கள் பன்னிரண்டு பேரும் தங்கள் வேலையை ராஜினுமாச் செய்துவிட்டுத் தொழிற்கந்தோர் மூலம் இவ்வேலைக்குத் தெரிவுசெய்யப்படவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவேண்டுமென அறிவிக்கப் பட்டிருக்கிறார்களாம். இப்போது வேலையிலிருப்பவர்களை 'வேலையற்றவர்கள்' என்று தொழிற்கந்தோரில் பதிவார்களா; அறிமுக அட்டைகள் கொடுத்து நேர்முகப்பரீட்சைக்கு அனுப்புவார்களா?

இந்தப் பன்னிரண்டு இளைஞர்களும் வேலை இழக்கத்தான் வேண்டுமா? ஏன் இந்தப் புதிய நடைமுறை; இதனால் யாருக்கு இலாபம்? அதிகாரிகள் அமைச்சர்கள் இது பற்றி அக்கறை செலுத்தவேண்டும்.

## உருத்திரபுரத்தில் பிட்டாபிஷேகம்

பிரதமமந்திரியாக இருந்த மாணிக்கவாசகர் அரிமர்த்தனபாண்டிய மன்னனிடம் இருந்து பெற்ற பொதுப் பணத்தில் பொதுமக்களை அழிக்கும் யுத்த கருவிகட்கு செலவிடாது [குதிரைகள் வாங்காது] திருப்பெருந்துறையில் ஆலயம் அமைத்ததன் மூலம் பணத்தைச் செலவிட்டதால் பாண்டியன் சினங்கொண்டான் அதனால் மாணிக்கவாசகரை அழைத்து சிறையிலிட்டான். மாணிக்கவாசகர் ஆதிஅந்தமற்ற சிவபிரானை வேண்டி அழுதார். அவரின் வேண்டுதலுக்கு வேண்டுவார் வேண்டுவதை ஈவோனாகிய இறைவன் ஆவணி மூலநட்சத்திரத்தில் குதிரை கொண்டுவருவதாக அசரீரி வாக்குப்பண்ணினார். மூல நட்சத்திரத்தில் இருந்து தொடங்கி மிகுதி நிகழ்ச்சிகளெல்லாம் ஏற்பட்டன. அவருடைய வேண்டுதலினாலேதான் இறைவன் மனித உருவில் கூலியாளராகவந்து செம்மனச்செல்வி அம்மையாரிடம் பிட்டுண்ணவேண்டியேற்பட்டது.

மழைக்குக் காரணகர்த்தாவாகிய சூரியன் ஆவணி [சி-க] மாதத்தில் ஆட்சி பெற்று மூலநட்சத்திரத்தில் மழைபெய்வதற்குரிய ஆரம்ப நாளாகும். [சூரியன் அதிதேவதை சிவன்] இச்சிறப்புப்பெற்ற ஆவணி மூலம் சைவஉலகில்பெரிதும் போற்றுதற்கும்பூசிப்பதற்கு முரியநாளாக மதிக்கப்பட்டு வருகின்றன.

உருத்திரபுரம் அன்றும் இன்றும் விவசாயநாடு. மழைதான் முக்கியத்துவம். சிவபெருமான் கூலியாளராக மண்வெட்டி பிடித்தது போல் இங்குள்ள விவசாயிகள் அனைவரும் மண்வெட்டி பிடித்து வயல்களில் வேலை செய்துவருகின்றனர். அவர்கள் ஆவணிமூலத்தினத்தில் நல்லமழை பெய்யவேண்டுமென்றும், தங்கள் வயல்கள் சிறந்து விளையவேண்டுமென்றும், உருத்திரனைப்பணிந்து பிட்டபிஷேகம்(மதுரையில், காசியில், பழனியில் செய்வது போன்று) இலங்கையிலுள்ள உருத்திரபுரச்சிவாலயத்திலும் செய்வது சிறப்பும், பொதிப்பும் உடையதாகும்.

சோழமன்னருடைய புராதன காலத்துச் சிவாலயம் உருத்திரபுரத்தில் அழிந்து கிடப்பதையின்றும் காணக் கூடியதாக இருக்கின்றது. தவத்திரு வடிவேல் சுவாமிகள் தலைமையில் கொட்டகை கட்டுவதற்கு நிலத்தில் குழிதோண்டும்போது சிவலிங்கம்தோன்ற அதைப் பல பெரியார்கள் பொறிக்கடவை அம்பாள் ஆலயத்துள் வைத்து, பின் சிவாலயம் கட்டி உருத்திரபுரீஸ்வரரை பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்துள்ளனர்.

அடியார்கள் ஆவணிமூல நட்சத்திரத்தில் உருத்திர புரீஸ்வரி சமேத உருத்திர புரீஸ்வரர் ஆலயத்தில் நிகழும் பிட்டபிஷேகத்தில் பங்குபற்றுவது அவர்களுக்கே சிறந்தது!

வில் இருப்பதுபோலன்றி, இங்கே சாதாரண சட்ட நிறைவேற்றல் ஒழுங்குக்கும் அரசியற் திட்ட ஒழுங்குக்கும் வேறுபாடுகள் காண்பிக்கப்பட்டுள்ளன.

ஆட்சிமன்றம் அரசியல் நிருணயசபையாகவும் மாற்றம் எடுத்தது. வேறு நாடுகளில் வெவ்வேறு விதத்தில் அரசியல் நிருணயசபையானதுபோல இங்கும் ஒரு விதத்தில் அது அமைந்தது.

அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும் ஒரு கூட்டில் வாழுமுலகு இன்று எமக்கு நிதர்சனமாகியுள்ளது.

இருக்கும் நிலைமை இல்லாமலாகிவிடும். அதற்கு பதிலாக நாட்டு [illegible]களால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி ஒருவர் அனைத்துக்கும் அதிகமான பதவியை [illegible]கிப்பார்.

இலங்கை குடியரசானாலும், எமது பொருளாதார நலன்களை உத்தேசித்தாவது பொதுநலவாயத்தில் இந்தியா அங்கம் வகிப்பது போல அங்கம் வகிக்க வேண்டுவது தவிர்க்க முடியாததென முன்னை நாள் பிரதமர் டட்லி சேன

மும், நாடுகளின் அனுபவத்தின் மூலமும் பலவிலமடைந்துள்ளன. இச்சபையின் நோக்கம் இதுவரையில் ஈடேறுதலால் பெரும் பணத்தொகையை விழுங்கிக்கொண்டிருக்கும் இச்சபையை தொடர்ந்தும் வைத்திருப்பதால் எழக்கூடிய பயன்கள் குறிப்பிடக்கூடியதாயிருக்கமாட்டா. அனைத்துக்கும் அடிப்படையாக அமெரிக்க சுதந்திர அறிக்கை போன்ற ஓர் அடிப்படை உரிமைப் பட்டியலோ, இந்திய யாப்பிலுள்ளதுபோன்ற உரிமைக்

## கவிதைநாடகம்

யாழ்ப்பாணம். ஞாயிறு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்று வரும் 'நிழல்' நாடக விழாவில் இன்று மாலை கவிஞர் [illegible]ம்பி'யின் ''வேதாளம் [illegible]சான்னகதை'' என்றகவிதைநாடகம்நடைபெறுகிறது பிரபலநாடக சினிமாநடிகர்களான திருவாளர்கள் ஏ, ரகுநாதன், லடிஸ்வீரமணி, ஜவாஹர், ஏ. ஆர். கிருஷ்ணமூர்த்தி ஆகியோருட்பட மற்றும்பலர்கலந்து கொள்கின்றனர்.

# கொழும்புபெண்களுக்குப்போல்இதர பகுதிகளுக்கும் தனி பஸ் வருமா?

கொழும்பில் பெண்களுக்காக மட்டும் சில விசேஷ பஸ் சர்வீஸை புதிதாக விடுவதற்காக பலபெண்கள் இ. போ. சவுக்கு நன்றி தெரிவித்து கடிதங்கள்எழுதி வருகிறார்களாம், இப்போது கொழும்பு கோட்டையிலிருந்து மாலையில் நுகேகொடை வெள்ளவத்தை முதலிய இடங்களுக்கு பெண்கள் பஸ்ஸுகள் ஓடுகின்றன. கோட்டை காரியாலயங்களில் வேலைபார்க்கும் பெண்கள், இந்த பஸ்ஸுகளில் ஏறி தூர இடங்களிலுள்ள தங்கள் வீடுகளுக்கு பொழுது சாய்வதற்குள் செல்லமுடிகிறது.

பெண்களுக்கான பஸ்ஸுகளை அதிகரித்து பல இடங்களுக்கும் இவற்றை விடுவதற்கு முயற்சிகள் நடக்கின்றனவாம். மிக நல்லது. இந்தப் புதிய ஏற்பாடு செய்தமைக்காக இ. போ. ச. அதிகாரிகளையும் சிறப்பாக அனில் முனசிங்கா அவர்களையும் பாராட்டவேண்டும்.

### ஐயாறன் எழுதுவது

ஆனால் இந்த வசதிகள் கொழும்புக்கு வெளியில் இல்லை யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் இப்போது இவ்விதம் செய்வார்களோ தெரியவில்லை. இந்த வாய்ப்பு இல்லாததால் சில சமயம் பெண்கள் பஸ் ஏறமுடியாமல், தெருவில் மணிக்கணக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது.

தமிழகத்திலே ஒவ்வொரு பஸ்ஸிலும் பெண்களுக்காக 20 இடங்கள் வரை ஒதுக்கியுள்ளனர். பெண்கள் இல்லாதபோதுதான் ஆண்கள் அதில் உட்காரலாம். பெண்கள் வந்துவிட்டால், அந்த இடங்களிலுள்ள ஆண்கள் எழுந்துவிட வேண்டும். பெண் பிரயாணிகளுக்கு அங்கு செய்யப்பெற்றுள்ள இவ்வித வசதியை இலங்கையிலே பல இடங்களிலும் செய்யவேண்டியது அவசியமாகும். சிலபஸ்களில் சமீப காலமாக மூன்று இடங்களை மட்டும் பெண்களுக்கு ஒதுக்கியிருப்பதைப் பார்த்தேன். ''பெண்களுக்குமட்டும்'' என்று மேலே எழுதியிருப்பினும், அதை கவனிக்காமலோ என்னவோ ஆண்களே அவற்றில் அமருகின்றனர். பெண்கள் உட்கார இடமின்றி நிற்கின்றார்கள். பெண் பிரயாணிகள் சற்றே துணிச்சலுடன் மேலேஎழுதியுள்ள போர்டை, ஆண்களுக்குக் காட்டினால் ஆண்கள் எழுந்துவிடக்கூடும். கண்டக்டர்கள்தான் இதைக் கவனித்து, பெண்களுக்குரியஇடங்களில் அவர்கள் உட்கார வசதி செய்யவேண்டியது முறை. ஆனால் இக்கடமையை அவர்கள் செய்வதாகக்காணோம்.

பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்களில் சராசரி மூன்றில் ஒருவராவது பெண்கள் ஆகவே மொத்த ஸ்தானங்களில் மூன்றில் ஒருபகுதியையாவது பெண்களுக்கென ஒதுக்குவது விரும்பத்தக்கது இ. போ. ச. புதிய தலைவர் இதையும் செய்வதாயின், அதிக பெண்களின் நன்றிக்கு உரியவராவார்.

0 0 0

கொழும்பு காலிபேஸ் திடலில் சென்றவாரம் பழைய மோட்டார்கள் பந்தயக் காட்சி நடைபெற்றது. அதைப்பார்க்க பெரிய கூட்டம் திரண்டிருந்தது. இப்படியான கூட்டமென்றால் ''பிக்பாக்கெட்'' டுகளுக்குக் கேட்கவா வேண்டும். ஒருவருடைய மணிபர்ஸை அங்கு ஒரு ஜேப்படிக்காரர் எடுத்த போது, பர்ஸுடன் அவரது கையைப் பிடித்துவிட்டதாகவும், பின்னர் பக்கத்திலிருந்த காடையர்கள் திரண்டு வந்து, கூச்சலிட்டு கலவரம் செய்யவே இருதரப்பினருக்கும் கைகலப்புஏற்பட்டு, பலருக்குக் காயம் பட்டதாகவும் அறியவந்தேன். பழைய கார் பந்தயத்தை வேடிக்கை பார்க்கச் சென்ற ஒருவர் மூக்கு உடைந்து ஆஸ்பத்திரிக்குச் சென்று பலத்தகட்டுகளுடன்மாலையில் வீடுதிரும்பினார்.

அன்று போயா அதனால் டாக்டர்கள் இல்லை என்றும் அந்தவாலிபர் பலமணி நேரம், சிகிச்சைபெறமுடியாமல் ஆஸ்பத்திரியில் காத்துக்கிடக்க நேரிட்டதாகவும் அறியவந்தேன். உயிருக்கு மன்றாடும் நிலையில் இரத்தல் பெருக்கெடுத்து யாரும் வெட்டுக்சாயங்களுடன் ஆஸ்பத்திரக்கு போயா அன்று வந்தாலும் இப்படித்தானா?

பாடம்: கூடுமானவரை பொதுமக்கள் இவ்வித காட்சிகளைக்காண வெளியே போகாமல் இருப்பதே புத்தி அவசியல் செல்லத்தான் வேண்டுமாயின் பஸ்ஸிலும் தெருவிலும், மக்கள் கூடுமிடங்களிலும் பிக்பாக்கெட்டுகள் அதிகரித்து விட்டதால், குறைந்த அளவு சில்லறை மட்டும் எடுத்துச் செல்லுவது நல்லது. கைக்கடிகாரம் பவுண்டன்பேனா இவற்றையும் அவசியமின்றி எடுத்துச் செல்லத் தேவையில்லை.

......

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலினுட் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.

—திருநாவுக்கரசர்

கூறியிருக்கிறார்.

நாடக விமர்சனம்

## ''அவளைக் கொன்றவள் நீ''

''நிழல்' நாடக நிறுவனம் வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்திக் கொண்டிருக்கும் நாடகவிழாவில் முதலாவது நாள் மேடையேற்றப்பட்டதுப்பறியும் நாடகம் அவளைச் கொன்றவள் நீ'

ஓர் எழுத்தாளன் தன்னுடைய காதலியுடன் வாழ்க்கை நடாத்துவதற்குத் தேவையான பணத்தை தன்னுடைய மனைவியிடமிருந்தே பெறுவதற்காக தன் மனைவியின் காரோடுமோதி விபத்துக்குள்ளான தன் காதலியைமறைத்துவைத்துவிட்டு அவள் இறந்து விட்டதாகத்தன் மனைவியை நம்பச் செய்து அவளை நீ கொன்று விட்டாய் என மிரட்டி ஈற்றில் 'அந்த மிரட்டலால் தன்னையே பலியாக்கிக் கொள்வது தான் கதை; நாடகத்தின் தொடக்கத்தில் இறந்து விட்டதாகச் சொன்ன எழுத்தாளனின் காதலி நாடகத்தின் முடிவில் திடீரென்று தோன்றுவது தான் சஸ்பென்ஸ்.

சுபியாணிர் கதைவசனத்தில்உருவான இந்த நாடகத்தின் இயக்குநர் சுபையர் ஹமீட்.

இந்த நாடகத்தில் எழுத்தாளன் பாத்திரமேற்ற ரகுநாதன, தன்னை ஒரு எழுத்தாளனாக மேடையில் காட்டிக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கிடைக்கவில்லையாயினும் மனைவியை மிரட்டும் போதும் பொலிஸ் இன்ஸ்பெக்டரோடு வாதாடும் போதும் சிறப்பாக நடித்துப் பாராட்டைப் பெற்றார்.

எழுத்தாளனின் மனைவி சாந்தியாக நடித்த ஜெயந்தியும் தமதுபாகத்தை உணர்ந்து நடித்தார். இந்நடிகை முன்னணியில் திகழும் நம்பிக்கையை அவர் நடிப்பு எடுத்துக்காட்டுவதாயிருந்தது.

பொலிஸ் இன்ஸ்பெக்டராக நடித்த ஜவாஹர் மிக நன்றாக நடித்தார்.

தலைவர் தர்மலிங்கமாக நடித்த சண்முகலிங்கம் தன்னுடைய தெளிந்த தொனியாலும் பாத்திரத்தை உணர்ந்து நடித்ததாலும் பார்வையாளர்களின் ஒருமுகமான பாராட்டைப் பெற்றார்.

எழுத்தாளரின் காதலி லஷ்மியாக நடித்த சித்ரா ஒரு சில காட்சிகளில் தோன்றினாலும் சிறப்பாக நடித்தார் இவருக்கு கலையுலகில் நல்ல எதிர்காலம் இருக்கிறது எனலாம் மற்றவர்களைப் பற்றி சிறப்பாகவோ, குறைவாகவோ சொல்லுவதற்கு எதுவும் இல்லை.

ஒரு நாடகம்அதுவும் துப்பறியும் நாடகமொன்றைத் தமிழில் தயாரித்து ஒப்பேற்றுவதென்பது நம் நாட்டைப் பொறுத்தவரையில் சுலபமான காரியமல்ல. மேடை ஒழுங்கு, அமைப்பு நடிப்பு ஒளி, ஒலி அமைப்பு ரசிகர்களின்பொறுமையைச் சோதிக்கக் கூடியகாட்சி இடைவெளி இத்தனையும் கவனித்து ஒரு நல்ல நாடகத்தை அளித்த ரகுநாதன் பாராட்டுக்குரியர்.

'கானுஆனு'

......

ஆர். ஜி.

## லண்டனில் சிகிச்சைபெறுவார்

கோட்டை, சனி

தம்பதெனியா ஆட்சி மன்ற உறுப்பினர் திரு ஆர் ஜி. சேனநாயக்கா சத்திர சிகிச்சை செய்வதற்தாக லண்டன் பயணமாக இருக்கின்றார். இவர் சில நாட்களாகச் சுகவீனம் காரணமாக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டது தெரிந்ததே.


## ''இரு கோடுகள்''

# பரிசுப் போட்டி

இன்று (6-9-70) 6-30 காட்சியின் இடைவேளையின்போது இருகோடுகள் பரிசுப்போட்டி கூப்பன்கள் அதிர்ஷ்டம் பார்க்கப்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

ராணி சினிமா

ஸ்தாபனத்தார்


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org